இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 14 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 06 – புதன்கிழமை 23 ஆகஸ்ட் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 14: Thiruvalluvar Year - 2054 - Aavani 06 - Wednesday 23 August 2023 - Madurai 12 Pages ₹ 5.00

## உற்பத்தித் துறையில் கடந்த இரண்டு ஆண்டுகளில்

# இந்தியாவிலேயே அதிக தொழில் முதலீடுகளை ஈர்த்துள்ளோம்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 21.8.2023 அன்று முகாம் அலுவலகத்தில், முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்தில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் பேராசிரியர் எஸ்தர் டஃப்லோ, பேராசிரியர் ரகுராம் ராஜன், டாக்டர். அரவிந்த் சுப்ரமணியன், பேராசிரியர் ழான் த்ரேஸ், டாக்டர். எஸ்.நாராயண் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக. 23 -**

**“உற்பத்தித் துறையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தியாவிலேயே அதிக முதலீடுகளை ஈர்த்துள்ளோம்” என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போது பெருமிதத்துடன் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.8.2023 அன்று முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

பல்வேறு பணிகளுக்கிடையே, இந்தப் பொருளாதார ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியிலும், அந்த வளர்ச்சி அனைவருக்கும் பயனளிப்பதாக இருப்பதை உறுதிசெய்வதிலும் கண்ணும் கருத்துமாக கவனம் செலுத்தி வருகிறது. இதற்கான ஒவ்வொரு திட்டத்தையும் வடிவமைப்பதில் இருந்து அதனைச் செயல்படுத்தும் வரை, பல்வேறு துறை வல்லுநர்களிடம் கருத்துகளைக் கேட்பதோடு மட்டுமன்றி, உங்களைப் போன்ற தலைசிறந்த பொருளாதார வல்லுநர்களின் ஆலோசனைகளையும் கேட்டறிந்து, செயல்பட்டு வருகிறது.

**நாட்டிலேயே அதிக முதலீடுகளைப் பெற்றுள்ளோம்!**

இந்தக் குழுவின் கடந்த கூட்டங்களின் போது, தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையை மேம்படுத்தி, இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான பல உத்திகளைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டீர்கள்.

இதன் அடிப்படையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் உற்பத்தித் துறையில் தமிழ்நாடு ஏற்றுமதிக் கொள்கை, தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு சரக்குப் போக்குவரத்துக் கொள்கை, தமிழ்நாடு மின் வாகனங்கள் கொள்கை போன்ற பல்வேறு துறைகளுக்கான தனித்தனிக் கொள்கைகளை வகுத்து அறிவித்துள்ளோம்.

குறிப்பாக, பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளைத் தரக்கூடிய தோல் அல்லாத காலணி உற்பத்தியிலும், எதிர்கால வளர்ச்சித் துறையான மின்வாகன உற்பத்தியிலும் நாட்டிலேயே அதிக முதலீடுகளைப் பெற்றுள்ளோம்.

மொத்தமாக, உற்பத்தித் துறையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மிட்சுபிஷி, பெகட்ரான், ஓலா போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட 241 முதலீட்டுக் கருத்துருக்கள் மூலம், 2 இலட்சத்து 97 ஆயிரத்து 196 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்துள்ளோம்.

2020-21ஆம் ஆண்டில் மின்னணுவியல் பொருட்கள் உற்பத்தியில் நான்காவது இடத்தில் இருந்த தமிழ்நாட்டை, கடந்த இரண்டு ஆண்டுகளில் முதல் இடத்திற்கு உயர்த்தியுள்ளோம். இத்தகைய பல்வேறு முயற்சிகளால், நாட்டிலுள்ள மாநிலங்களிலேயே ஏற்றுமதி வளர்ச்சிக்கான தயார்நிலைக் குறியீட்டில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. இவ்வாறு உற்பத்தித் துறையில் இந்தியாவின் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாட்டை முன்னிறுத்திட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

**வேலைவாய்ப்புகள் பெருகிடும்!**

இந்த முயற்சிகள் வெற்றியடையும் போது, தமிழ்நாட்டு இளைஞர்களுக்குத் தேவையான வேலைவாய்ப்புகள் பெருகிடும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன். கல்வியிலும், மருத்துவத்திலும், வளர்ந்த நாடுகளுக்கு இணையாக தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

`மக்களைத் தேடி மருத்துவம்’ என்ற திட்டத்தின் விளைவாக ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களின் மருத்துவச் செலவினம் குறைந்துள்ளதாகவும், மக்களுக்கு மிகவும்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## 384-ஆவது சென்னை தினக் கொண்டாட்டம்!

# புகைப்படக் கண்காட்சி! முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

### சென்னை பள்ளி மாணவர்கள் - ‘தி இந்து’ குழுமம் சார்பில் அமைக்கப்பட்டது!

சென்னை, ஆக. 22 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 384-வது சென்னை தின கொண்டாட்டத்தை முன்னிட்டு நேற்று (22.08.2023) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில், சென்னை பள்ளி மாணவர்களின் “அக்கம் பக்கம்” என்ற புகைப்படக் கண்காட்சியையும், “தி இந்து” குழுமத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியினையும் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

சென்னை தினம் என்பது தமிழ்நாட்டின் தலைநகரமாகிய சென்னை தோற்றுவிக்கப்பட்டதாகக் கருதப்படும் கி.பி. 1639, ஆகஸ்ட் 22ஆம் நாளை நினைவூட்டும் வகையில் அமைக்கப்பெற்ற ஒரு சிறப்புமிக்க நாளாகும். இந்நாள் 2004ஆம் ஆண்டில் இருந்து நினைவு கூரப்பட்டு வருகிறது.

பத்திரிக்கையாளர்களான சசி நாயர், மயிலாப்பூர் டைம்ஸின் ஆசிரியரான வின்சண்ட் டி சொஸா, மெட்ராஸ் மியூசிங்ஸின் ஆசிரியரான முத்தையா ஆகிய மூவரும் இணைந்து உருவாக்கியதே இந்த சென்னை தினம். முதன் முதலில் ஒரு சில கருப்பு வெள்ளைப் படங்களுடன் 2004ஆம் ஆண்டு தொடங்கிய இந்தக் கொண்டாட்டம் இன்று வளர்ச்சியடைந்து புகைப்படக் கண்காட்சி, உணவுத் திருவிழா, மாரத்தான் ஓட்டம் என பல பரிமாணங்களில் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவின் முதல் மற்றும் உலகின் இரண்டாவது மாநகராட்சி, சென்னை மாநகராட்சியாகும்.

சென்னை தினக் கொண்டாட்டத்தில் முதலமைச்சர் அவர்கள், சென்னை பள்ளி மாணவர்களின் “அக்கம் பக்கம்” என்ற புகைப்படக் கண்காட்சியினைத் திறந்து வைத்துப் பார்வையிட்டு, மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, அவர்களை பாராட்டி வாழ்த்தினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சென்னை போட்டோ பினாலே அறக்கட்டளையின் மூலம் ஐபோன்களைப் பயன்படுத்தி ஆறு மாதக் கால புகைப்படப் பட்டறைகள் புளியந்தோப்பு சென்னை தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி, பெரம்பூர் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் நுங்கம்பாக்கம் மாதிரி மேல்நிலைப்பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளில் நடத்தப்பட்டது.

சென்னை தினத்தை முன்னிட்டு, சென்னை போட்டோ பினாலே அறக்கட்டளையானது, புகைப்படம் எடுப்பதை ஒரு நடைமுறையாகவும், கலையாகவும் ஊக்குவித்து கொண்டாடுகிறது. லென்ஸ் வழி கல்வித்திட்டம் மற்றும் இடைநிலை நிகழ்வுகள் மூலமாக ஆர்வத்தை தூண்டி, சுய வெளிப்பாடு மற்றும் பிரதிபலிப்பை ஊக்குவிக்கும் வகையில் ஒரு சமூகத்தை வளர்ப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

மெட்ராஸ் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக ‘அக்கம் பக்கம்’ என்கிற தலைப்பில் நடைபெறும் கண்காட்சியில் இடம்பெறும் புகைப்படங்கள் சென்னை பள்ளி மாணவர்களால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு புகைப்படமும் மாணவர்களின் வாழ்க்கையை உள்ளது உள்ளவாறு பிரதிபலிக்கும் கண்ணோட்டங்களாக அமைந்துள்ளன. பள்ளி வளாகங்களுக்குள் எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படங்களில் இடம்பெறும் சூரிய ஒளியால் நனைக்கப்பட்ட தாழ்வாரங்கள், பூனைகள் மற்றும் காகங்கள், வண்ணங்களை தெளிக்கும் மிதிவண்டிகள் மற்றும் பள்ளிப் பைகள், விளையாட்டுக்கள் நிறைந்த பொழுதுபோக்குகளில் கண்ணிமைக்கும் நொடியில் ஊஞ்சலாடும் சில கணங்கள், பாட வகுப்புகளுக்கு இடையே ஒளிந்திருக்கும் சிரிப்புகளும், அக்கறைகளும் நிறைந்த காட்சிகள் ஓவியங்களாக தீட்டப்பட்டு இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

பள்ளிகளுக்கு வெளியே நடத்தப்பட்ட ‘போட்டோ வாக்கில்’, மாணவர்கள், சமூகத்தின் தறியில் பின்னிப்பிணைந்த மக்கள், பரபரப்பாக நடைபோடும் பாதசாரிகள், சன்னல்களின் வழியே தலை சாய்த்துப் பார்க்கும் பிள்ளைகள், தன் பணிகளுக்கு நடுவே டீக்கடைகளின் வாசலில் ஓய்வு எடுக்க வந்த கடை உரிமையாளர்கள், புகைப்படக் கலைஞர்களின் கண்ணைப் பறிக்கும் பூ வியாபாரிகள் போன்றவர்களின் உருவங்களும் உணர்ச்சிகளும் படம் பிடிக்கப்பட்டு இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சியில் குழந்தைகளின் கண் வழியே தோன்றியுள்ள சென்னை மாநகரத்தின் வாழ்க்கையானது காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது. இதனை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கண்டு களித்து மாணவர்களைப் பாராட்டினார்.

மூன்று புத்தகங்களை வெளியிட்டார்!

முதலமைச்சர் அவர்கள் “தி இந்து” குழுமத்தின் ஆவண காப்பகத்தில் இருந்து செறிவாக தேர்வு செய்யப்பட்ட சென்னை நகரின் புகைப்படத் தொகுப்புகளைக் கொண்ட புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து, பார்வையிட்டார்.

தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், “தி இந்து” குழுமத்தின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள ‘எபிக் சாகா ஆப் தி சோழாஸ்’, ‘தமிழ்நாடு இன் ஃபோக்கஸ்: கல்ச்சர் அண்ட் சொசைட்டி; பாலிடிக்ஸ் அண்ட் கவர்னன்ஸ்’ மற்றும் ‘பயணியர்ஸ் ஸ்டார்ஸ் இன் தி மெட்ராஸ் கேலக்ஸி’ ஆகிய மூன்று புத்தகங்களை வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர்மு. மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், ‘தி இந்து’ குழுமத்தின் தலைவர் திருமதி நிர்மலா லஷ்மண், இயக்குநர்கள் என்.ராம், என்.முரளி, என்.ரவி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்! தடைவிதிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு!

*புதுடெல்லி, ஆக.23-*

*அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற உத்தரவுக்கு தடைவிதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது. இது பற்றிய விபரம் வருமாறு:-*

*சேலம் சுகவனேஸ்வரர் கோவிலில் அர்ச்சகர் நியமனத்திற்கான விண்ணப்பங்களை வரவேற்று கோயிலில் நிர்வாக அதிகாரி கடந்த 2018 ஆம் ஆண்டு அறிவிப்பு வெளியிட்டார். இதை எதிர்த்து அதே கோயிலில் பணிபுரிந்துவந்த சுப்ரமணிய குருக்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அவர் தாக்கல் செய்த மனுவில், “அறிவிப்பில் கூறப்பட்டுள்ள தகுதிகள், சுகனேஸ்வர் கோயில் ஆகம விதிகளின் அடிப்படையில் இல்லை” என கூறியிருந்தார்.*



*நீதிபதி ஆனந்த வெங்கடேசன் முன்பு, இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, இந்து அறநிலை துறை சார்பில் குறிப்பிட்ட கோவில்களில் பின்பற்றக் கூடிய மரபை முடிவு செய்ய அந்த கோவில் அர்ச்சகர்களிடமிருந்து, தகுதி சான்றிதழ் பெற்று விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.*

*இந்த வாதங்களைக் கேட்ட நீதிபதி ஆனந்த வெங்கடேஷ், “யார் வேண்டுமானாலும் அர்ச்சகர் ஆகலாம். குறிப்பிட்ட ஆகமம் மற்றும் பூஜை முறைகளில் அவர்கள் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சாதிக்கு எந்த பங்கும் இல்லை” என்றார்.*

*இந்த தீர்ப்பை எதிர்த்து மனுதாரர் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு தலைமை நீதிபதி கங்காபுர்வலா, நீதிபதி ஆதிகேசவலு அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில், ஆகம கோயில்களில் அர்ச்சகர்களை பரம்பரையாக தான் நியமிக்க வேண்டும் என்றும், தனி நீதிபதியின் உத்தரவு உச்ச நீதிமன்றத்திற்கு எதிரானது என்றும் வாதிடப்பட்டது. எனவே இடைக்கால தடை விதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.*

*தனி நீதிபதி உத்தரவுக்கு எதிராக எந்த ஒரு இடைக்கால உத்தரவும் பிறப்பிக்க முடியாது எனவும் உயர்நீதி மன்ற நீதிபதிகள் மறுத்து விட்டனர்.*

*இந்நிலையில் இந்த வழக்கு மேல்முறையீட்டு மனுவாக உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது, கோயில் ஆகம விதிப்படி தேர்ச்சி பெற்றவர்கள் அர்ச்சகராகலாம் என்ற உத்தரவுக்கு தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்*

# சர்வதேச நகரங்களுக்கு இணையாக சென்னை மாநகரை உருவாக்கி வருகிறோம் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்!

**சென்னை, ஆக. 23 -**

**“சர்வதேச நகரங்களுக்கு இணையாக சென்னை மாநகரை உருவாக்கி வருகிறோம்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.**

இதுகுறித்து கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ட்விட்டர் பதிவு வருமாறு:-

ஆங்கிலேயர்கள் உருவாக்கிய ‘#Madras’ஐ சென்னை என பெயர் மாற்றி அதன் கட்டமைப்பை செதுக்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். சிங்கார சென்னை, சிங்கார சென்னை 2.0 திட்டங்களின் மூலமாக சர்வதேச நகரங்களுக்கு இணையாக சென்னையை உருவாக்கி வருகிறார் நம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.



அடுத்தடுத்த பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளை சென்னையில் நடத்தி, நம் மாநகரின் புகழை உலகெங்கும் கொண்டுசேர்க்கும் பணியை நாம் மேற்கொண்டு வருகிறோம். புயல் - மழை - வெள்ளம் என எத்தனை பேரிடர்களை சந்தித்தாலும், உடனே மீண்டு வந்து வந்தாரை வாழ வைக்கும் சென்னைக்கும் - அதன் மக்களுக்கும் 384ஆவது சென்னை தின வாழ்த்துகள்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 23-08-2023

# தேர்தல் ஆணையம் சிதைப்பு

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை புறக்கணித்திருப்பதன் மூலமாக தேர்தல் ஆணையத்தை சிதைத்துவிட்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

**உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு அமைச்சரை நியமிப்பதன் மூலமாக தேர்தல் ஆணையத்தை தனது கைப்பாவையாக ஆக்க முயற்சித்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. தேர்தல் ஆணையத்தின் ரிமோர்ட் பிரதமர் கைக்கு போய்விட்டது. தனித்துச் செயல்பட வேண்டிய தேர்தல் ஆணையத்தை அரசியல் அமைப்பாக, அதுவும் ஆளும் கட்சியின் அரசியல் அமைப்பாக மாற்றும் தந்திரத்தை பட்டவர்த்தனமாகச் செய்துவிட்டார் பிரதமர் மோடி. இது தேர்தல் ஆணையத்தைச் சிதைப்பது மட்டுமல்ல உச்ச நீதிமன்றத்தையும் அவமானப்படுத்துவது ஆகும்.**

உச்சநீதிமன்றத்தை உதாசீனப்படுத்த வேண்டும், அப்படி உதாசீனப் படுத்துவதை அந்த உச்சநீதிமன்றத்துக்குத் தெரிவது மாதிரி செய்ய வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்டுள்ளது ஒன்றிய அரசு.

தலைமைத் தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக் குழுவில் இருந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கும் முடிவை பா.ஜ.க. அரசு எடுத்துள்ளது. இனிமேல், பிரதமர் தலைமையிலான குழுவுக்கு அந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சட்ட முன் வடிவு மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் குழுவில் பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், பிரதமரால் பரிந்துரைக்கப்படும் ஒன்றிய அமைச்சர் ஒருவர் இடம் பெற்றிருப்பார்கள். இதற்கு முன் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி இருந்த இடத்தை, ஒன்றிய அமைச்சரை வைத்து நிரப்பி இருக்கிறார்கள்.

அமைச்சரவை செயலர் மற்றும் அரசுச் செயலர் பதவிக்குக் குறையாத இரண்டு அதிகாரிகள் கொண்ட தேடல் குழுவானது 5 பேரை தேர்வுக் குழுவுக்கு பரிந்துரைக்க வேண்டும். அந்த ஐந்து பேரில் உள்ளவர்களையோ அல்லது அவர்களைத் தாண்டிய வேறு யாரையுமோ பிரதமர் தலைமையிலான தேர்வுக் குழுவானது தேர்வு செய்யலாம். பரிந்துரைக்கு வெளியில் இருந்தும் ஆட்களை எடுக்கலாம் என்றால், எதற்காக அந்த பரிந்துரைக் குழுவை அமைக்க வேண்டும் என்பதும் தெரியவில்லை.

**மிக சந்தேகத்துக்கு உரிய வகையில் தேர்தல் ஆணையர் அருண் கோயல் என்பவரது நியமனம் நடந்தது. இவர் பஞ்சாப் மாநில அதிகாரி ஆவார். இவர் 2022 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் நாள் திடீரென அவராக பதவி விலகினார். மறுநாளே இவர் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டார். அதாவது தேர்தல் ஆணையராக இவரை நியமிப்பதற்காகவே பதவி விலக வைத்துள்ளார்கள் என்பது வெளிப்படையான செய்தி ஆகும். அருண் கோயல் நியமனத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினரும் வழக்கு தாக்கல் செய்தார்கள். இதுபோன்ற முக்கியமான பணியிடத்துக்கான தேர்வை கொலிஜியம் போன்ற அமைப்புதான் நடத்த வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்தார்கள்.**

தேர்தல் ஆணையர் நியமனம் செய்வது தொடர்பான வழக்கு கடந்த மார்ச் மாதம் உச்சநீதிமன்றத்தில் வந்தது. நீதியரசர் கே.எம்.ஜோசப் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு அதனை விசாரித்தது. அருண் கோயலின் நியமனத்தில் சந்தேகங்கள் இருப்பதாக நீதிபதிகள் சொன்னார்கள். தலைமைத் தேர்தல் ஆணையர், பிற தேர்தல் ஆணையர்களின் நியமனமானது சுதந்திரமாக நடைபெற வேண்டும் என்பதே உச்சநீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கின் கோரிக்கை ஆகும். கடந்த மார்ச் மாதம், அரசியல் சாசன அமர்வு தனது வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது.

**“பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழுவின் அறிவுறுத்தலின்படி, தேர்தல் ஆணையர்கள், தலைமை தேர்தல் ஆணையர் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்ய வேண்டும். மக்களவை எதிர்க்கட்சி தலைவர் இல்லை என்றால், தனிப் பெரும்பான்மையுள்ள எதிர்க்கட்சியின் தலைவர், இந்த குழுவில் இடம்பெற வேண்டும். தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும் வரை இந்த நடைமுறை தொடரும்.**

**ஜனநாயகத்தில் தேர்தல் எந்தவித சந்தேகமும் இன்றி நியாயமாக நடைபெற வேண்டும். புனிதத்தன்மை காக்கப்படுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும். இல்லையென்றால் மோசமான விளைவுகள் ஏற்படும்.**

**அரசியல் சாசன அமைப்புக்கு உட்பட்டு தேர்தல் ஆணையம் சட்டப்படி செயல்பட வேண்டும். நியாயமற்ற முறையில் செயல்பட முடியாது. நியாயமான தேர்தலை தேர்தல் ஆணையத்தால் உறுதி செய்ய முடியவில்லை என்றால், ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்கும் சட்ட விதிகளின் கீழ் அளிக்கப்பட்ட உத்தரவாதங்கள் சிதைந்து போகும். அரசியல் சாசனத்தின் 324வது பிரிவில், தேர்தல் ஆணைய உறுப்பினர்கள் நியமனத்துக்கு சட்டம் இயற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எந்த சட்டத்தையும் நாடாளுமன்றம் நிறைவேற்றவில்லை” என்று அரசியல் சாசன அமர்வு கூறியது.**

உடனே ஒரு சட்டத்தை கொண்டு வந்துவிட்டார்கள். உச்சநீதிமன்ற நீதிபதிக்கு பதிலாக பிரதமர் விரும்பும் அமைச்சரை நியமித்துவிட்டார்கள். அதாவது உச்சநீதிமன்றத்தோடு நேருக்கு நேராக மோதுகிறது பா.ஜ.க. அரசு.

‘அமலாக்கத்துறையை கவனிக்க சஞ்சய் குமார் மிஸ்ராவைத் தவிர வேறு யாரும் இல்லையா?’ என்று கேட்டதல்லவா உச்சநீதிமன்றம். அதற்கு பழிவாங்கவே இதுபோன்ற நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்து வருகிறது.

**“பிரதமர் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவரால் தேர்தல் ஆணையக் குழு உறுப்பினர்களை நியமிக்கும் தற்போதைய அமைப்பு மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை” என்று 2012 ஆம் ஆண்டு ஜீன் 2 ஆம் தேதி அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதியவர் அப்போதைய பா.ஜ.க. தலைவர் அத்வானி. அத்தகைய நம்பிக்கைத் தகர்ப்பைத்தான் இன்றைய பிரதமர் செய்துள்ளார். கூடுதலாக சிதைக்கவும் செய்துவருகிறார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2023) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் 7 கோடியே 58 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், தேனி மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் 13 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தலா 50 படுக்கை வசதிகளுடன் ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகள் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி மைதிலி கே.ராஜேந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் 11 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

*சென்னை, ஆக.23-*

*தமிழகத்தில் 11 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையில்,*

*தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.*

*நீலகிரி, ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், பெரம்பலூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.*

*சென்னையைப் பொருத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும்.*

*இவ்வாறு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தின கொண்டாட்டத்தை முன்னிட்டு நேற்று (22.08.2023) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில், “தி இந்து” குழுமத்தின் ஆவண காப்பகத்தில் இருந்து செறிவாக தேர்வு செய்யப்பட்ட சென்னை நகரின் புகைப்படத் தொகுப்புகளைக் கொண்ட புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், “தி இந்து” குழுமத்தின் தலைவர் திருமதி நிர்மலா லஷ்மண், இயக்குநர்கள் என்.ராம், என்.முரளி, என்.ரவி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உணவு விநியோகப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்

# முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து நன்றி தெரிவித்தனர்!

## தனி வாரியம் அமைத்து நலன் பாதுகாக்கப்படும் என்று அறிவித்தமைக்காக!

**சென்னை, ஆக. 23 -**

**உணவு விநியோகம் மற்றும் சேவைப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களான கிக் (Gig) தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கும் விதமாக தனி நல வாரியம் அமைக்கப் படும் என்று அறிவித்தமைக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அத்தொழிலாளர்கள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.8.2023) தலைமைச் செயலகத்தில், இணைய வழி சேவை நிறுவனங்களின் வாயிலாக உணவு விநியோகம் மற்றும் சேவைப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களான கிக் (Gig) தொழிலாளர்கள் சந்தித்து, சுதந்திர தின விழா உரையில், தங்களது நலனை பாதுகாக்கும் விதமாக தனி நல வாரியம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

முதலமைச்சர் அவர்கள் 15.8.2023 அன்று சுதந்திர தின விழா உரையில், “சென்னை போன்ற பெருநகரங்களில் தொடங்கி, பல்வேறு நகரங்களிலும் இன்று நாம் அடிக்கடி காணக்கூடிய காட்சி ஒன்று. ஓலா, ஊபர், ஸ்விகி, ஸொமட்டோ போன்ற நிறுவனங்களைச் சார்ந்த வாகனங்கள் விரைவாக சேவை வழங்கும் நோக்கத்துடன் பயணிப்பதைக் காணலாம். நேரத்தின் அருமை கருதி பணி புரியும் இத்தகைய பணியாளர்களின் வாழ்க்கை முக்கியமானது. அவர்களின் ஒட்டுமொத்த நலனைப் பாதுகாக்கும் வகையில், அவர்களுக்கென தனியே நல வாரியம் ஒன்று அமைக்கப்படும்” என்று அறிவித்தார்.

அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் விதமாக கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, ஓய்வூதியம், இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம், ஈமச்சடங்கு போன்ற பல்வேறு நல உதவிகளை 18 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் வாயிலாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகின்றது.

இவ்வரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து 31.07.2023 வரை, அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் 14,29,502 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு, 12,52,978 பயனாளிகளுக்கு 989.10 கோடி ரூபாய் நலத்திட்ட உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ வாங்குவதற்காக ரூபாய் ஒரு லட்சம் மானியம் வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. தற்போது தொழில்முறை டாக்ஸி வாகனம் வாங்குவதற்கும் இத்திட்டத்தின் கீழ் மாற்று பாலினத்தவரான திருநங்கைகள் பயன்பெறவும் இத்திட்டத்தினை விரிவுபடுத்தி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

அந்த வகையில், இணைய வழி சேவை நிறுவனங்களில் பணிபுரியும் உணவு விநியோகம் மற்றும் சேவைப் பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களான கிக் (Gig) தொழிலாளர்களின் ஒட்டுமொத்த நலனை பாதுகாக்கும் வகையில் தனியே நல வாரியம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்காக, ஓலா, ஊபர், ஸ்விக்கி, ஸொமாட்டோ, டன்ஸோ, ஸெப்டோ போன்ற இணைய வழி சேவை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் முதலமைச்சர் அவர்களை நேற்று சந்தித்து தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

### உலகக் கோப்பை செஸ்:

## இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இரண்டாவது இந்தியர் பிரக்ஞானந்தா!

*பாகு, ஆக.23-*

*உலக கோப்பை செஸ் அரையிறுதியில் உலகின் 3ம் நிலை வீரரான ஃபேபியானோவை வீழ்த்தினார் பிரக்ஞானந்தா. உலக கோப்பை செஸ் இறுதிப் போட்டியில் கார்ல்சனை பிரக்ஞானந்தா எதிர்கொள்கிறார்.*

*உலக கோப்பை செஸ் தொடர் அஜர்பைஜானில் உள்ள பாகு என்ற நகரில் நடைபெற்று வருகிறது. இதன் அரை இறுதியில் இந்திய கிராண்ட் மாஸ்டரான சென்னையை சேர்ந்த பிரக்ஞானந்தா உலக தர வரிசையில் 3வது இடத்தில் உள்ள அமெரிக்காவின் பேபியானோ கருணாவுடன் மோதினார்.*

*47வது காய் நகர்த்துக்கு பிறகு இந்த ஆட்டமும் ‘டிரா’ ஆனது. இதைத் தொடர்ந்து டைபிரேக்கர் சுற்று நடத்தப்பட்டு, இதில் வெற்றி பெறுவோர் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியும் என்ற நிலை உருவானது.*

*அதன்படி டைபிரேக்கர் சுற்றில் பிரக்ஞானந்தா, உலகளவில் மூன்றாம் இடத்தில் உள்ள வீரரான ஃபேபியானோ கருணாவை எதிர்கொண்டு விளையாடினார்.*

*இந்த போட்டியில் பிரக்ஞானந்தா தன்னை எதிர்த்து விளையாடிய கருணாவை 3.52.5 புள்ளிகள் அடிப்படையில் வீழ்த்தினார். இதன் மூலம் பிரக்ஞானந்தா இறுதி போட்டிக்கு முன்னேறி இருக்கிறார்.*

## வேலூர் அரசு பெட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில்

# ரூ.150 கோடியில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஆக.23-

**ரூ.21.08 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், தேனி மற்றும் திருவண்ணாமலையில் ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகள் ஆகியவற்றை திறந்து வைத்து, வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2023) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் 7 கோடியே 58 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், தேனி மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் 13 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தலா 50 படுக்கை வசதிகளுடன் ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகள் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் “மக்களைத் தேடி மருத்துவம்” சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் “இன்னுயிர்காப்போம்நம்மைக்காக்கும்48” போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் 7 கோடியே 58 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இக்கட்டடத்தில், பொது வெளிநோயாளிகள் பிரிவு, குழந்தைகள் வெளிநோயாளிகள் பிரிவு, கண் வெளிநோயாளிகள் பிரிவு, அறுவை அரங்கம், அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு பிரிவு, இரத்த சேமிப்பு வங்கி, பிரசவ பிரிவு, பச்சிளங் குழந்தைகள் கவனிப்பு பிரிவு, ஆண்கள் உள்நோயாளிகள் பிரிவு, பெண்கள் உள்நோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு ஆகிய பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மருத்துவமனையின் வாயிலாக தினமும் சுமார் 1,000 புறநோயாளிகள் பயன்பெறுவார்கள்.

தமிழ்நாடு மாநில ஆயுஷ் குழுமத்தின் 2016-17ஆம் ஆண்டிற்கான மாநில ஆண்டு செயல் திட்டத்தின் கீழ், தேனி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 50 படுக்கை வசதியுடன் கூடிய ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகள் அமைக்க தேசிய ஆயுஷ் திட்ட இயக்ககத்தால் அனுமதி வழங்கப்பட்டு, அதற்கான நிர்வாக ஒப்புதல் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது.

அதன்படி, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் 35,198 சதுர அடி பரப்பில், தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 6 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவிலும், திருவண்ணாமலை, செங்கம் சாலை, பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் 29,460 சதுர அடி பரப்பில், தரை மற்றும் மூன்று தளங்களுடன் 6 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள 50 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைக் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகளில், இந்திய மருத்துவமுறைகளில் சித்தா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய முறைகளில் சிகிச்சைகள் வழங்கப்படும்.

மேலும், வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் 7 தளங்களுடன் கட்டப்படவுள்ள பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கட்டும் பணிக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை ஆகியவற்றில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 43 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர்

ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி மைதிலி கே.ராஜேந்திரன், மருத்துவக் கல்வி இயக்குநர் மரு. சாந்திமலர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.ஏ. சண்முககனி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.டி.எஸ்.செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருவேற்காடு

# தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் - ரூ.25 கோடி மதிப்பில் திருப்பணிகள்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக.23 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (21.7.2023) திருவள்ளூர் மாவட்டம், திருவேற் காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், முக மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றின் கருங்கல் கட்டுமானத் திருப்பணி, அனைத்து உபசன்னதிகள் மற்றும் பிரகாரங்களின் திருப்பணியைத் தொடங்கி வைத்தார்.

பின்னர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், கருங்கல் கட்டுமான திருப்பணி, தரை நிலையை உயர்த்துதல், உட்பிரகாரம் மற்றும் வெளிப்பிரகாரங்களிலுள்ள அனைத்து உபசன்னதிகளுக்கும் திருப்பணி செய்திட ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டிருகின்றது. இதில் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.5 கோடி மதிப்பீட்டிலும், உபயதாரர் நிதியிலி ருந்து ரூ.2.5 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இதோடு 25 உபசன்னதிகளுக்கு ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்யப்படவுள்ளன.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் முதல் 10 திருக்கோயில்களில் பெருந்திட்ட வரைவு (Master Plan) வாயிலாக திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.300 கோடி மதிப்பீட்டிலும், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயிலில் ரூ.170 கோடி மதிப்பீட்டிலும், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் ரூ.99 கோடி மதிப்பீட்டிலும், திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.103 கோடி மதிப்பீட்டிலும், இராமேஸ்வரம், இராமநாத சுவாமி திருக்கோயிலில் ரூ.159 கோடி மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை, அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.78 கோடி மதிப்பீட்டிலும், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.64 கோடி மதிப்பீட்டிலும், வடலூர் அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம் ரூ.99.90 கோடி மதிப்பீட்டிலும், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் ஒட்டுமொத்தமாக ரூ.80 கோடி மதிப்பீட்டிலும், இருக் கன்குடி, மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.70 கோடி மதிப்பீட்டிலும் என 10 திருக்கோயில்களுக்கு பெருந்திட்ட வரைவு பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இப்படி இந்து சமய அறநிலைத்துறையில் திருப்பணிகள் ஒருபுறமும், மூத்த குடிமக்களை பாதுகாக்கின்ற பணிகள் மறுபுறமும், கலாச்சார மையங்கள், பண்பாட்டுச் சின்னங்களை பாதுகாக்கின்ற நோக்கத்தோடு ரூ.1400 கோடி செலவில் 23 பணிகளை எடுத்து இந்து சமய அறநிலையத்துறை நிறைவேற்றுவதற்கு உண்டான அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளுக்கு பெருந்துணையாய் இருக்கின்ற அரசு உயர் அலுவலர்களுக்கும், அறங்காவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நீட் தேர்வினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கருணையைக் காட்டுகின்றவராகவும், நீட் தேர்விற்குத் தடைவிதிக்க வேண்டும் என்ற உறுதியோடு துணிந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அ.தி.மு.க. மாநாடு என்பது கூடினார்கள், பேசினார்கள், கலைந்தார்கள் அவ்வளவுதான்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.



ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32ல் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.175.00 இலட்சம் மதிப்பீட்டில் சூரம்பட்டி மண்டல அலுவலகம் அருகில் கோவலன் வீதியில் தார் சாலை அமைக்கும் பணியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், மாநகராட்சி ஆணையர் ஜானகி, மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் ப.க.பழனிசாமி, சுப்பிரமணியம், சசிகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.8.2023) தலைமைச் செயலகத்தில், திரைப்பட இயக்குநர் வசந்தபாலன், அர்பன் பாய்ஸ் ஸ்டியோ தயாரிப்பாளர்கள் கிருஷ்ணகுமார், வரதராஜன் ஆகியோர் சந்தித்து, இணைய வழி சேவை நிறுவனங்களின் வாயிலாக உணவு விநியோகம் மற்றும் சேவைப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கும் விதமாக தனி நல வாரியம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# நூறு வருசத்துக்கு ஒரு தடவை தான் இந்த மாதிரி ஒரு வீரன் பிறப்பாரு!

## கலைஞரை புகழ்ந்த நடிகர் பிரகாஷ்ராஜ்!

சென்னை,ஆக.23,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறித்து நடிகர் பிரகாஷ்ராஜ் புகழ்ந்துரைத்த வீடியோ ஒன்று வலைதளங்களில் பரவி வருகிறது.

அதில் நடிகர் பிரகாஷ் ராஜ் கூறியிருப்பதாவது:-

ஒரு நூற்றாண்டின் கலைஞர் அவர். கலைஞர் இருந்தவரைக்கும் இந்த சாதி பற்றி எல்லாம் பேச வேண்டிய அவசியம் இருந்ததில்லை. நுழையவில்லை நம் நாட்டிற்குள்ளே கலைஞர் இல்லாததால்தான் இப்போது நாம் பேச வேண்டி இருக்கிறது.

இந்த மனித உலகத்தில், கலைஞர் அவர்கள் இல்லாதது நமக்கு பெரிய இழப்பு என்று பார்க்கிறேன்.

அதனால்தான் அவர் ஒரு நூற்றாண்டின் தலைவர். நூற்றாண்டின் கலைஞர். நூற்றாண்டின் கவிஞர்.

இந்த நூற்றாண்டில் அவர் ஒரு அதிசய மனிதர்




அவர் இல்லாதது நமக்கு பெரிய இழப்பு என்று பார்க்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல்பக்கத் தொடர்ச்சி

பயனுள்ளதாகவும் இருப்பதாக மாநிலத் திட்டக் குழு அளித்துள்ள தரவுகளின் மூலம் வெளிப்படுகிறது.

இந்தத் திட்டத்திற்கு இணையாக, கல்வித் துறையில் தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தக் கொண்டு வரப்பட்டுள்ள திட்டமான ‘இல்லம் தேடிக் கல்வி’ திட்டத்தின் மூலம் இதுவரை 27 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

மேலும், உயர்கல்வி பெறும் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த பயிற்சியினை வழங்கி, தங்கள் துறையில் முதன்மையாகத் திகழ வேண்டும் என்பதற்காக,‘நான் முதல்வன் திட்டம்’ என்ற தொலைநோக்குத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டம் தொடங்கி ஓராண்டு முடிந்த நிலையில், 13 இலட்சம் மாணவர்கள் திறன்பயிற்சி பெற்றுள்ளனர். இந்தத் திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 25 ஆயிரம் உயர்கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

பெண் கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்துள்ள நமது அரசு, பெண் கல்வியை ஊக்குவிக்கும் வண்ணம், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து தேர்ச்சி பெற்று உயர்கல்வியைத் தொடரும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண்’ திட்டத்தின் மூலம் மாதம் 1,000 ரூபாய் வழங்கி வருகிறோம். இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இடைநிற்றல் குறைந்துள்ளது!

ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பல ஆயிரம் பெண்கள் தடையின்றி உயர்கல்வி பெற இந்தத் திட்டம் வழிவகுத்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் படிப்பினை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத்துக் குறைபாட்டினைப் போக்கவும், கற்றல் இடைநிற்றலைத் தவிர்க்கவும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். இந்தத் திட்டத்தில் தற்போது 1,978 பள்ளிகளில் பயிலும் தொடக்கப் பள்ளி மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இந்தத் திட்டத்தி னால் மாணவர்களின் வருகை உயர்ந்துள்ளதோடு, இடைநிற்றலும் குறைந்துள்ளது என மாநிலத் திட்டக்குழுவின் ஆய்வு கூறுகிறது.

இந்தியாவிற்கே முன்மாதிரியான இந்தத் திட்டத்தை, 404 கோடி ரூபாய் செலவில், 31 ஆயிரத்து 8 பள்ளிகளில் பயிலும் 18 லட்சத்து 53 ஆயிரத்து 798 தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு விரிவுபடுத்திட எண்ணியுள்ளோம்.

இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் எனச் சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய்த் தமிழ்நாட்டின் தலைமகன், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15ஆம் நாள் முதல் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது.

### பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும்!

Universal Basic Income கோட்பாட்டின் அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ள ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டது. குடும்பத்திற்காக வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்பிற்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதோடு, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும்.

நமது அரசின் கனவுத் திட்டமான மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெறுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைகள் வரையறை செய்யப்பட்டு, விண்ணப்பங்களைப் பெறுவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு, 1 கோடியே 54 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. வருவாய், சொத்துகள், மின் பயன்பாடு போன்ற தகுதிக் குறியீடுகள் பற்றிய தரவுகளை பல மாதங்களாகத் தொகுத்துள்ளோம். இவற்றின் மூலம் தகுதியுள்ள குடும்பத் தலைவிகளைத் தேர்ந்தெடுத்து, பயன்பெறச் செய்ய வேண்டும் என்பதே நமது அரசின் நோக்கம்.

இந்தத் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு உங்களுடைய ஆலோசனைகள் இன்றியமையாதது. எனவே, மீண்டும் ஒருமுறை இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதற்கு நன்றி கூறுவதுடன் உங்கள் கருத்துகளைக் கேட்பதற்கும் ஆவலாக இருக்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



வேலூர் அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரி புற நோயாளிகள் பிரிவில் வைட்டல் பே (Vital Bay) தனிப்பிரிவை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (21.08.2023) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார், ப.கார்த்திகேயன், திருமதி அமுலு விஜயன், மாவட்ட திட்ட குழு தலைவர் முயாபு, மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில் குமார், வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பாப்பாத்தி துணை இயக்குனர் (மருத்துவ பணிகள்) மரு. பானுமதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.8.2023) தலைமைச் செயலகத்தில், ஓலா, ஊபர், ஸ்விக்கி, ஸொமாட்டோ, டன்ஸோ, ஸெப்டோ போன்ற இணைய வழி சேவை நிறுவனங்களின் வாயிலாக உணவு விநியோகம் மற்றும் சேவைப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களான கிக் (GiG) தொழிலாளர்கள் சந்தித்து, சுதந்திர தின விழா உரையில், தங்களது நலனை பாதுகாக்கும் விதமாக தனி நல வாரியம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஆட்சியர் அ.அருண் தம்புராஜ், மேயர் சுந்தரி ராஜா முன்னிலை

# கடலூர் மாநகராட்சி பகுதியில் புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், ஆக.23

கடலூர் மாநகராட்சி பகுதிகளில் பல்வேறு புதிய திட்டப்பணிகளை 21.08.2023, திங்கள் கிழமை, அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா ஆகியோர் முன்னிலையில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தொடக்கி வைத்தார்.

கடலூர் மாநகராட்சிக் குட்பட்ட மஞ்சக்குப்பம் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் கீழ் மஞ்சக்குப்பம் அண்ணா மார்க்கெட் ரூ.503 இலட்சம் மதிப்பீட்டிலும், கடலூர் முதுநகர் பக்தவச்சலம் மார்க்கெட் ரூ.527 இலட்சம் மதிப்பீட்டிலும், திருப்பாதிரிப்புலியூர் பான்பாரி மார்க்கெட் ரூ.760 இலட்சம் மதிப்பீட்டிலும் என மூன்று மார்க்கெட்களிலும் புதிய கடைகளுடன் கூடிய தினசரி சந்தை அமைக்கும் பணிக்கு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து கடலூர் முதுநகர் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநகராட்சியின் சேவை பொதுமக்களை எளிதில் சென்றடையும் வகையில், சிறப்பு நிதியின் (2022-23) கீழ் குண்டுசாலை பகுதியில் மண்டல அலுவலகம்I ரூ.250 இலட்சம் மதிப்பீட்டிலும், புல்லுகடை பகுதியில் மண்டல அலுவலகம் II ரூ.250 இலட்சம் மதிப்பீட்டிலும், கம்மியம்பேட்டை பகுதியில் மண்டல அலுவலகம்III ரூ.250 இலட்சம் மதிப்பீட்டிலும், கடலூர் முதுநகர் பகுதியில் மண்டல அலுவலகம்IV ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டிலும் என மாநகராட்சியில் நான்கு புதிய மண்டல அலுவலக கட்டிடங்களுக்கான கட்டுமான பணிக்கு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித்ததாவது, கடலூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மஞ்சக்குப்பம் அண்ணா மார்க்கெட், முதுநகர் பக்தவச்சலம் மார்க்கெட், திருப்பாதிரிப்புலியூர் பான்பாரி மார்க்கெட் ஆகிய மூன்று மார்க்கெட்கள் ரூபாய் 17.90 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டுவதற்கும் மற்றும் நான்கு புதிய மண்டல அலுவலகம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும் கடலூர் மாநகராட்சி தரம் உயர்த்தப்பட்ட பிறகு மூன்றாம் கட்ட பாதாள சாக்கடை திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது. மாநகராட்சி ஆக கடலூர் தரம் உயர்த்தப்பட்ட பிறகு பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி மண்டல அலுவலக கட்டிடத்தில் தரைதளத்தில் முகப்பு மண்டபம், காத்திருப்பு அறை, இ-சேவை மையம், ஆதார் அறை, காசாளர் அறை, உதவி ஆணையர் அறை, பொறியாளர் அறை, நிர்வாக அறை, பொது பிரிவு, பொறியியல் பிரிவு, நிர்வாக அலுவலர் அறை, கண்காணிப்பாளர் அறை மற்றும் ஆண், பெண் கழிவறையும் முதல் தளத்தில் மன்றத் தலைவர் அறை, காத்திருப்பு அறை, மன்றக்கூடம், பதிவு அறை, வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொது சுகாதார பிரிவு, நில அளவர் அறை, பதிவு அறை மற்றும் ஆண், பெண்கழிவறை ஆகியவை 4842 சதுர அடி பரப்பளவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜராம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட இயக்குநர் லி.மதுபாலன், மாநகராட்சி ஆணையாளர் மு.காந்தி ராஜ், மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, ஒன்றிய கழக செலாளர் தங்க.ஆனந்தன், டி.காசிராஜன், பி.சுப்பிரமணியன், விஜயசுந்தரம், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், மாநகர பகுதி செயலாளர்கள் எஸ்.பி.நடராஜன், ஜி.பி.வெங்கடேஷ், சலீம், இளையராஜா, மாணவரணி கே.எஸ்.ஆர். பாலாஜி, தகவல் தொழில்நுட்ப அணி கே.எஸ்.ஆர். கார்த்திக் உள்ளிட்டமாமன்ற உறுப்பினர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


வாழ வைத்த தெய்வங்கள்



முத்தமிழறிஞர் திராவிடப் பெருந்தலைவர்



சிறுகதை மன்னர் எஸ்.எஸ்.தென்னரசு

23.08.2023

மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

( 1951 - 2020 )





முன்னாள் திருமயம் சட்டமன்ற உறுப்பினர் (1989 – 1991)

முன்னாள் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட துணைச் செயலாளர்

முன்னாள் பொன்னமராவதி ஒன்றிய பெருந்தலைவர் (1986 – 1991)

கழக முன்னணி கள வீரர்

திரு. ஆலவயல் சுப்பையா BA.,Ex.MLA., அவர்கள்

என்றும் உங்கள் வழித்தடத்தில், தலைவர் வழிகாட்டுதலில்

ஆலவயல்முரளிசுப்பையா MCA.,

திருமயம் தொகுதிப் பொறுப்பாளர் – சமூக வலைதளப் பிரிவு

குடும்பத்தினர் மற்றும் கழகத்தினர்

சுதா பிரிண்டர்ஸ் பொன்னமராவதி


### அமைச்சர் உதயநிதி நடத்திய ‘நீட்’ போராட்டம்

# அ.தி.மு.க. அலறுமளவிற்கு பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, ஆக.23-

விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் 20.08.2023 அன்று மேற்கொண்ட உண்ணாநிலைப் போராட்டம் தமிழ்நாட்டில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளது. அதனுடைய வெளிப்பாடுதான் அதிமுக மாநாட்டில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியின் பேச்சும், ஆட்டுக்குட்டி அண்ணாமலைகளின் அறிக்கைகளும் அமைந்துள்ளன.

தி.மு.க. இளைஞரணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் நீட் தேர்வை ரத்து செய்து, மாணவர்களின் தற்கொலையை தடுப்பதற்கான முயற்சியாக நேற்று தமிழ்நாடு முழுவதும் உண்ணாநிலைப் போராட்டத்தை அறிவித்தார்கள். சென்னையில் தான் தலைமையேற்று அந்த உண்ணாவிரதப் போராட்டத்தை மிக வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார்கள். அப்போது வெளியிடப்பட்ட காணொளி காட்சியில்அனிதாவின் மரணம் குறித்த செய்தி வந்த பொழுது அவர் கண்கலங்கியது மாணவர்களின் தற்கொலை எந்த அளவிற்கு அவரைப் பாதித்துள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாகும். இறுதியாக அவர் உரையாற்றியப் பொழுது அவர் காட்டிய ஆவேசம் நீட் தேர்வின் மீது அவர் கொண்டுள்ள கோபத்தையும் அதனை அகற்றுவதற்கு அவரது உறுதியான நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியது. அதனால் தான் அமைச்சர் பதவி போனாலும் எனக்கு கவலை இல்லை. தமிழ்நாட்டு இளைஞர்கள், மாணவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது என் இலக்கு என்று உறுதிப்பட அறிவித்துள்ளார். இந்தப் போராட்டம் தமிழ்நாட்டில் மாபெரும் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளது. அதனால் தான் மதுரை மாநாட்டில் பேசிய அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் நீட் தேர்வு, தி.மு.க. பங்கு பெற்றிருந்த காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசால் கொண்டுவரப்பட்டது என்று கூறி அதற்கான ஒரு ஆதாரமாக ஒரு பேப்பரை காட்டி ஆவேசம் காட்டினார்.

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நீட் தேர்வு வந்தது என்பது எல்லோருக்கும் அறிந்த ஒன்று. ஏதோ ஒரு பரம ரகசியத்தை வெளியிட்டது போன்று மாநாட்டில் பேசியிருக்கிறார் பழனிச்சாமி. நீட் தேர்வு முறை காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கொண்டுவரப்பட்ட போது அதை எதிர்த்தது திராவிட முன்னேற்ற கழகம். பொதுவாக மத்தியில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் மாநிலங்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் மதிப்பதில் மெத்தனப் போக்கு காட்டுவது வாடிக்கையான ஒன்றாகும். உதாரணமாக பிரதமர் மோடி அவர்கள் குஜராத் முதலமைச்சராக இருந்த பொழுது மாநிலத்தின் உரிமைக்காகக் குரல் கொடுப்பதும், மத்திய அரசை எதிர்த்து போராடுவதும் வாடிக்கையாகக் கொண்டிருந்தார். ஆனால் அவரே ஒன்றியத்தின் பிரதமராக வந்த பிறகு மாநிலத்தின் உரிமைகளை, உணர்வுகளை ஒடுக்குவதில் உச்சத்தில் சென்று கொண்டிருக்கிறார். எனவே மாநில அரசின் உணர்வுகளை மதிக்காமல் ஒன்றிய அரசு அன்றைக்கு நீட் தேர்வை கொண்டு வந்தது.

ஆனால் திராவிட முன்னேற்ற கழகம் தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த 2011 ஆம் ஆண்டு வரையில் நீட் தேர்வு தமிழ்நாட்டுக்குள் நுழையாமல் பார்த்துக் கொண்ட பெருமை அன்றைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. கூட்டணி அரசில் இருந்தாலும் நீதிமன்றம் வரை சென்று நீட்டிற்கு தடை வாங்கி நியாயத்தை பெற்றவர் தலைவர் கலைஞர் ஆவார். திராவிட முன்னேற்றக் கழக அரசு மாற்றப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் அதிமுக ஆட்சி ஏற்பட்டது. அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள் உயிரோடு இருந்த வரையில் திராவிட முன்னேற்றக் கழக அரசின் வழியில் அதிமுக ஆட்சி காலத்திலும் நீட் தேர்வை தமிழகத்தில் நுழைய அவர் அனுமதிக்கவில்லை. தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பொறுப்பேற்க பிறகு தான் இந்த நீட் தேர்வு தமிழ்நாட்டுக்கு வந்தது. இப்போது நான் கேட்கிறேன் நீட் தேர்வு மூலம் தமிழ்நாட்டு மாணவர்களுக்கும் துரோகம் செய்தது யார்? சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அ.தி.மு.க.வினரும், ஆட்டுக்குட்டி அண்ணாமலையும் நீட் தேர்வை ரத்து செய்வோம் என்று வாக்குறுதி அளித்துவிட்டு தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற திமுக, மாணவர்களை ஏமாற்றி விட்டதாக தொடர்ந்து குற்றச்சாட்டுகளை வைத்து வருகிறார்கள். நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டிய அதிகாரம் ஒன்றியத்தில் அதிகாரத்தில் உள்ள மோடி அரசை சார்ந்ததாகும். எனவே தான் திமுக ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து நீட் தேர்வு ரத்து செய்வதற்கு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சட்டப்பேரவையில் ஒட்டு மொத்த உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவோடு நீட் தேர்வுக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானத்திற்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் காலம் கடத்தினார். அதனை திரும்பி அரசுக்கு அனுப்பி வைத்தார். மீண்டும் சட்டப்பேரவையில் அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. வேறுவழி இல்லாமல் அவர் குடியரசு தலைவருக்கு அனுப்பி உள்ளார். ஒப்புதல் அளிக்க வேண்டிய பொறுப்பு குடியரசு தலைவருக்கு உண்டு. அதற்கான ஒப்புதலைப் பெற்றுத் தர வேண்டிய கடமை ஒன்றிய அரசுக்கு இருக்கிறது.



இந்த நிலையில் தான் தற்போது நீட் தேர்வில் மருத்துவர் கல்லூரியில் இடம் பிடிக்க முடியாத குரோம்பேட்டை மாணவர் தற்கொலை செய்து கொண்டார். அதனைத் தொடர்ந்து அவருடைய தந்தையும் தற்கொலை செய்து கொண்டது மிகப் பெரிய சோகத்தை தமிழ்நாட்டில் ஏற்படுத்தியது. இந்த நிலையில் தான் ஒன்றிய அரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் அழுத்தம் கொடுப்பதற்காக நீட் தேர்வு சம்பந்தமான தமிழ்நாடு அரசின் சட்டத்திற்கு ஒப்புதல் பெறுவதற்காக உண்ணாவிரதப் போராட்டத்தை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் நேற்று அறிவித்தார்கள். தமிழ்நாடு முழுவதும் இலட்சக்கணக்கான மாணவர்களும் இளைஞர்களும் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டு அரசின் சட்டத்திற்கு ஆதரவாகவும், ஒன்றிய அரசின் ஆளுநரின் ஆணவத்திற்கு எதிராகவும் மக்கள் கிளர்ந்தெழுந்து உள்ளதை இந்த உண்ணா நிலை அறப்போராட்டம் அறிவித்துள்ளது. இதற்கு பிறகாவது ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் சட்டத்திற்கு ஒப்புதலை அளித்து மாணவர்களின் தற்கொலைக்கு முற்றுப் புள்ளி வைத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கை விடுத்துள்ளார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஆலவயல் சுப்பையா**

**ஆகஸ்ட் 23 (2020)**



கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, மாவட்ட பிரதிநிதி, மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

திருமயம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும், மாவட்ட திருக்கோவில்கள் அறங்காவலர் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**



கோனூர் ஊராட்சியில் 41ஏக்கர் நிலப்பரப்புள்ள சங்கான்குளத்தை தனது சொந்த செலவில் தூர்வாரி கொடுக்கும் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு விவசாயிகள் பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர். சங்கான்குளத்தில் தூர்வாரும் பணியை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார். அருகில் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி உட்பட பலர் உள்ளனர்.

### கோனூர் ஊராட்சியில் 41 ஏக்கர் நிலத்தினை தனது சொந்த செலவில் தூர் வார நடவடிக்கை

# சங்கான்குளத்தில் தூர்வாரும் பணி!

## அமைச்சர் ஐ. பெரியசாமி ஆய்வு!

ஆத்தூர், ஆக.23-

கோனூர் ஊராட்சியில் 41ஏக்கர் நிலப்பரப்புள்ள சங்கான்குளத்தை தனது சொந்த செலவில் தூர்வாரி கொடுக்கும் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு விவசாயிகள் பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர். சங்கான்குளத்தில் தூர்வாரும் பணியை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கோனூர் ஊராட்சியில் சங்கான்குளம் உள்ளது 41ஏக்கர் (16.43ஹெக்டேர்) நிலப்பரப்புள்ள இந்த குளத்தை தூர்வாரி கொடுக்கவேண்டுமென்று ஊராட்சிமன்ற தலைவர் வெள்ளதாய் தங்கபாண்டியன் தலைமையில் விவசாயிகள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்தனர். கோரிக்கை மனுக்களை பெற்ற உடனே தனது சொந்த செலவில் சங்கான்குளத்தை தூர்வாரி கொடுப்பதாக உறுதியளித்தார். அதன்படி சங்கான் குளத்தில் தூர்வாரும் பணி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவருமான ப.க.சிவகுருசாமி தலைமை தாங்கினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் தங்கபாண்டியன், ஒன்றிய குழு உறுப்பினர் திருப்பதி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சிமன்ற தலைவர் வெள்ளைத்தாய் தங்கபாண்டியன் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் தூர்வாரும் பணிக்கான பூமி பூஜையில் கலந்துகொண்டு தூர்வாரும் பணியை துவக்கி வைத்தார். அப்போது விவசாயிகள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி தூர்வாரும் போது எடுக்கப்படும் வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவேண்டுமென்றும் எக்காரணம் கொண்டும் விற்பனைக்கு கொண்டுசெல்ல கூடாது என உத்தரவிட்டதோடு சங்கான்குளத்தை சிறப்பாக தூர்வாருவதோடு கரைகளை நன்றாக பலப்படுத்த வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்த குளம் தூர்வாருவதால் கோனூர், கரிசல்பட்டி ஊராட்சி, கசவனம்பட்டி, தருமத்துப்பட்டி பகுதி விவசாயிகள் பயன்பெறுவருவார்கள் என்றார். தங்களின் கோரிக்கையை ஏற்று உடனே சங்கான்குளத்தை தூர்வார நடவடிக்கை எடுத்ததற்கு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருக்கு கோனூர்வட்டார விவசாயிகள் மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் கன்னிவாடி பேரூர்கழக முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் சண்முகம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், ரெட்டியார் சத்திரம் ஒன்றிய உதவி பொறியாளர் மகேந்திரன், ராஜேஸ்கண்ணா, ஊராட்சிமன்ற தலைவர்கள் கசவனம்பட்டி சக்தி, கரிசல்பட்டி பால்ராஜ், ஒன்றியகுழு உறுப்பினர்கள் ஜஸ்டின் மிக்கேல் அம்மாள், நாகலெட்சுமி ரமேஷ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் சுப்புலெட்சுமி வள்ளுவன், வருவாய் ஆய்வாளர் ரித்திகா, கிராம நிர்வாக அலுவலர் சந்திரசேகர், ஆயகட்டு தலைவர்கள், வெல்லம்பட்டி ஊர் கவுன்டர், வார்டு உறுப்பினர் வெல்லம்பட்டி மணி, டாஸ்மாக் வடிவேல், கரிசல்பட்டி ஜோசப் ஆசான், ஆவாரம்பட்டி தாஸ், மற்றும் கோனூர் ஊராட்சியை சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர். நிறைவாக ஊராட்சி செயலாளர் காளிமுத்து நன்றிகூறினார்.

# தலைமைச்செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன் மகள் திருமணம்!

## அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு!

திருவெறும்பூர், ஆக.23-

திருவெறும்பூர் தொகுதி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என். சேகரன் சித்ரா. இவர்களது மகளும், திருவெறும்பூர் பகுதி செயலாளரும், திருச்சி மாநகராட்சி 40 வது வார்டு கவுன்சிலருமான சிவக்குமாரின் சகோதரியுமான இன்ஜினியர் நந்தினிக்கும், திருச்சி மாவட்ட ஊராட்சிகள்குழு துணைச் சேர்மன் கருணாநிதியின் சகோதரி கல்யாண சுந்தரி தெய்வத்திரு. சுந்தர் ராஜனின் மகன் இன்ஜினியர் பால ஆனந்துக்கும் திருமணம் நடந்தது. இதனைத் தொடர்ந்து திருமண வரவேற்பு விழாவைத் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை வகித்து வாழ்த்திப் பேசியதாவது.

திருவெறும்பூர் தொகுதியில் அரசு நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்த்ததில் திருவெறும்பூர் முன்னாள் எம்எல்ஏவான சேகரன் சிறப்பாக செயல்பட்ட வர். நீண்டகாலமாக பட்டா பெற முடியாமலிருந்த நவல்பட்டு அண்ணா நகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்புவாசிகளுக்குப் பட்டா பெற்றுத் தந்தவர். திருவெறும்பூரில் காவேரி குடிநீர் திட்டத்தைப் பெற்று தந்தவர். எனது கோரிக்கையை ஏற்று திருவெறும்பூர் தொகுதியில் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெற்றிக்காக பாடுபட்டதோடு, தன்னைவிட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தவர். 2016 ல் திருவெறும்பூர் தொகுதியில் மட்டும் தான் நான் பிரச்சாரத்திற்கு வந்தேன். திருவெறும்பூர் தொகுதி எம்எல்ஏவாக அன்பில் மகேஷ் பொய்யாமொழி தேர்ந்தெடுக்கப் பட்டதிற்கும் தற்போது அமைச்சரானதிற்கும் முக்கிய பங்கு மக்களின் பேரன்பைச் சேகரித்துள்ள சேகரனுக்கு உண்டு” என்றார்.

முன்னதாக, தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்ட செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, வரவேற்புரையாற்றினார். தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என். சேகரன் பேசியதாவது., “இத்தருணம் என் வாழ்நாளில் மறக்க முடியாதது. இதற்காக தனது பரம்பரையே ஒட்டுமொத்தமாக திமுகவின் வெற்றிக்குப் பாடுபடும்” என்று நெகிழ்ச்சியுடன் பேசினார். கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமாயன கே.என். நேரு முன்னிலை வகித்தார். உள்ளாட்சித்துறை அமைச்சர் ஐ . பெரியசாமி வாழ்த்துரை வழங்கினார். விழாவில், அமைச்சர்கள் வெள்ளக்கோவில் சாமிநாதன், மதுரை மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசர், மாநகர கழக செயலாளர் மதிவாணன், சட்ட மன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், அப்துல் சமது, தியாகராஜன், ஸ்டாலின் குமார், பழனியாண்டி, கதிரவன், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, துவாக்குடி நகராட்சி சேர்மன் காயாம்பு, உட்பட திரளானோர் கலந்து கொண்டனர்.

திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கருணாநிதி, கூத்தைப்பார் பேரூராட்சி தலைவர் செல்வராஜ், கூத்தைப்பார் பேரூர் செயலாளர் தங்கவேல் நன்றி கூறினர்.

### 25ஆம் தேதி விசாரணை

## காவிரியில் நீர் திறக்கக் கோரி வழக்கு

டெல்லி, ஆக 23-

காவிரியில் நீர் திறக்க உத்தரவிடக் கோரிய தமிழ்நாடு அரசின் வழக்கு 25ம் தேதி உச்சநீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

காவிரி வழக்கில் தமிழ்நாடு அரசின் முறையீட்டை ஏற்று வழக்கை விசாரிக்க புதிய அமர்வு உருவாக்கப்படும் என்று உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி அறிவித்துள்ளார். கர்நாடக அரசு கடந்த ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதம் 9ம் தேதி வரை காவிரியில் இருந்து தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய 51 டிஎம்சி நீரில் 15 டிஎம்சி மட்டுமே தந்திருப்பதால் எஞ்சியுள்ள 38 டி.எம்.சி நீரை உடனடியாக திறக்க உத்தரவிட வேண்டும் என டெல்லியில் சமீபத்தில் நடந்த காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் வினாடிக்கு 10,000 கன அடி வீதம் 15 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்க கர்நாடகத்திற்கு மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு அரசு தரப்பில், உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. அதில், ‘கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு திறந்து விட வேண்டிய நீரில் சுமார் 29 டிஎம்சி தண்ணீரை இன்னும் திறந்து விட வேண்டும். அதேபோல ஆகஸ்டு மாதத்தில் கர்நாடகம் 45 டிஎம்சி நீர் தர வேண்டும். காவிரி டெல்டா பாசன பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்களை காப்பாற்ற உடனடியாக வினாடிக்கு 24,000 கனஅடி வீதம் தண்ணீர் இந்த மாதம் முழுவதும் காவிரியில் திறந்து விட கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும். அதேபோன்று செப்டம்பர் மாதம் திறக்க வேண்டிய 36.76 டிஎம்சி நீரையும் காலதாமதமில்லாமல் உரிய நேரத்தில் திறந்து விடவும் கர்நாடகத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி வழக்கு கொடுத்துள்ளது.

தலைமை நீதிபதி சந்திரசூட், ‘காவிரி விவகாரம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் இந்த வழக்கில் உடனடியாக விசாரிக்கும் விதமாக 3 நீதிபதிகள் கொண்ட புதிய அமர்வு உருவாக்கப்படும்’ என்று அறிவித்தார்.

இந்நிலையில் காவிரியில் நீர் திறக்க உத்தரவிடக் கோரிய தமிழ்நாடு அரசின் வழக்கு 25ம் தேதி உச்சநீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படும் அறிவிக்கப்பட்டதுடன் 25 ஆம் தேதிக்கு இந்த வழக்கு பட்டியலிடப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடத்தக்கது.



கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மஞ்சகுப்பம் அண்ணா மார்க்கெட், முதுநகர் பக்தவச்சலம் மார்க்கெட், மற்றும் திருப்பாதிரிபுலியூர் பான்பரி மார்க்கெட் ஆகியவற்றில் புதிய கடைகளுடன் கூடிய தினசரி சந்தை அமைக்கும் பணி மற்றும் நான்கு புதியமண்டல அலுவலக கட்டிடங்களுக்கான கட்டுமானப் பணிக்கு, வேளாண்மை மற்றும் உழவு நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ.அருண் தம்புராஜ், மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா, கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, ஒன்றிய கழக செயலாளர் தங்க.ஆனந்தன்,டி.காசிராஜன், பி.சுப்பிரமணியன், விஜயசுந்தரம், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர். பாலமுருகன் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நீட்: நீதியைக் கேலிக் கூத்தாக்கி - கூட்டாட்சி முறையை அவமதிப்பதா?

இந்தியாவில் நீட் தேர்வு நடைமுறைப்படுத்தப்பட்ட காலம் முதல் தற்போது வரை தமிழகத்திலும் பிற இடங்களிலும் அதனால் நிகழும் தற்கொலைகளும்தொடர்கதையாகிவிட்டது. நீட் தேர்வில் இரு முறை தோல்வியுற்ற விரக்தியில் சமீபத்தில் உயிரை மாய்த்துக்கொண்ட சென்னையை சேர்ந்த 19 வயது மாணவனையும் சேர்த்து, NEET தேர்வினால் தற்கொலை செய்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது.

இந்த ஆண்டுக்கான நீட் தேர்வு முடிவுகள் ஜுன் 1 ஆம் தேதி வெளியான நிலையில், நீட் வரலாற்றில் முதல் முறையாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபஞ்சன் எனும் மாணவன் 720/720 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்தில் முதலிடம் பிடித்தார்.

மேலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் அகில இந்திய அளவில் முதல் 10 இடங்களில் இடம்பெற்று சாதனை படைத்தனர். இந்த மாணவர்களின் சாதனை பாராட்டுக்குரியதே ஆயினும், இவர்களின் வெற்றியை வைத்து நீட்தேர்வினை நியாயப்படுத்த முடியாது.

தி.மு.க. அரசும் பிற அரசியல் கட்சிகளும் நீட் தேர்வை எதிர்ப்பதற்கு காரணம் நம் மாணவர்களுக்கு அந்த தேர்வை எதிர்கொள்ளும் திறன் இல்லாததால் அல்ல.. நீட்போன்ற நுழைவுத் தேர்வுகள் சமுதாயத்தில் பின்தங்கிய குடும்பங்களில் இருந்து வரும் மாணவர்களை ஓரம் கட்டிவிடுவதால் தான். உதாரணத்திற்கு, தமிழ்நாட்டில் புகழ்பெற்ற கல்லூரிகளில் ஒன்றான ஐ.ஐ.டி.யில் சேரும் மாணவர்களில் 80 சதவீதத்தினர் சென்னையை சேர்ந்தவர்களாகவும், குறிப்பாக குறிப்பிட்ட பள்ளியை சேர்ந்த மாணவர்களாகவும் இருக்கின்றனர். அதேபோல பிராந்திய பொறியியல் கல்லூரிகள் தேசிய கல்லூரிகளாக மாற்றப்பட்டு 12 ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் இல்லாமல் நுழைவுத்தேர்வு அடிப்படையில் மாணவச் சேர்க்கை நடத்தப்பட்டு வருகிறது. இதனால் திருச்சியில் உள்ள NITஇல் சேரும் கிராமப்புற மாணவர்களின் எண்ணிக்கை 4 மடங்கு குறைந்தும் சென்னையை சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்தும்உள்ளது. இது தமிழ்நாட்டில் சென்னை மாணவர்கள் மட்டும் தான் திறமையானவர்களா; பிற மாணவர்கள் திறமையற்றவர்களா என்ற கேள்வியை எழுப்புகின்றது. ஆனால் அப்படி இல்லை..

‘தகுதி’ என்ற பதத்தைப் பற்றிய சரியான புரிதல் இல்லாததிலிருந்து விளைந்த குறுகிய பார்வை மற்றும் கருத்துகள் இவை. தகுதி என்பது ஒரு கருத்தாக்கம்; அதை மோசடி என்றுகூட கூறலாம். பல தளங்களில் ‘தகுதி’ என்பது போட்டித் தேர்வுகளில் ஒருவரது செயல்பாடு என்ற வெகுளித்தனமான கண்ணோட்டம் நிலவுகிறது. இந்த கண்ணோட்டம், சாதிய பாகுபாடுகள், பெற்றோரின் வெளிப்பாடு [EXPOSURE], படித்த பள்ளிகள், வாழும் சூழல் மற்றும் குழந்தைப் பருவ புறக்கணிப்பு மற்றும் முறைகேடு போன்ற இதர எதிர்மறை தாக்கங்கள் குறித்து மௌனமாக இருக்கிறது. கிராமத்தில், தலித்குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தைக்கு, தில்லியில் மேல் நடுத்தர வர்க்கக்குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தையை விட 10 மடங்கு குறைந்த வாய்ப்பும் வளங்களுமே இருக்கும். பின்னது தில்லியின் சிறந்த பள்ளிகளுள் ஒன்றில்சேர்ந்து, அதன் பெற்றோர் அதற்கான எதிர்காலப் பாதையை ஏற்கனவே தேர்ந்தெடுத்து முன்கூட்டியே தயாராகும் ஆதாயத்தைப் பெற்றுவிட, முன்னது பெரும்பாலும் சுமாரான அடிப் படை வசதிகள் கொண்ட பள்ளியில், பகுதி நேரம் பெற்றோருடன் வேலை பார்த்தபடியேசேர்ந்திருக்கும். இவ்வாறான நிலையில் தகுதியையோ திறமையையோ எவ்வாறு அளவீடு செய்ய முடியும்? இவ்விரு குழந்தைகளையும் ஒரே தேர்வை எழுத வைத்து, அதில் வாங்கும் மதிப்பெண்கள்அடிப்படையில் அவர்களது விண்ணப்பம் குறித்து முடிவு செய்வதென்பது பெரும் அநீதி அல்லவா? கோடிக்கணக்கான குழந்தை கள் மற்றும் பதின்பருவத்தினரின் எதிர்காலத்தை நீட் போன்ற - பயிற்சி பெறக்கூடிய, ஒரு ஒற்றைப் போட்டித்தேர்வுடன் இணைப்பது நியாயமற்றதாகும். இது, நிலவும் பிளவுகளை மேலும்விரிவுபடுத்தி, சமமின்மையை நிலைக்கச்செய்யும். தூய தகுதி எனும் கட்டுக்கதை அனைத்து தேர்வு அளவுகோல்களிலும் எதேனும் முரண்பாடு இருக்கும். கற்பனாவாதக் கருத்து. என்றாலும், கொள்கை இயற்றுபவர்கள் இதுபோன்ற முரண்பாடுகளையும் உள்ளார்த்த சார்புகளையும் முடிந்த அளவு குறைக்கும் வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டும். இதைத்தான், மருத்துவக் கல்விக்கான நுழைவுத்தேர்வுகளை அழித்து, தமிழ் நாட்டு மாணவர்களுக்கான ஒரு பொது, தளர்த்தப்பட்ட பாடத் திட்டமான சமச்சீர் கல்வியை அறிமுகப்படுத்தி, கலைஞரின் தலைமையிலான தி.மு.க. அரசு செய்தது. எளிய பாடத்திட்டம் ஆடுகளத்தினை ஓரளவு சமன்படுத்த உதவுகிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நீட் குறித்து சில ஆய்வுகளே மேற்கொள்ளப் பட்டிருந்தாலும், உலகமெங்கிலும், தகுதி எனும் கொள்கைக்கு நுழைவுத் தேர்வுகள் எதிரானவை என்பது குறித்து பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏ.கே.ராஜன் குழுவறிக்கை யின்படி, 2010இல் ஆங்கில வழிக் கல்வி பயின்ற 80.2 விழுக்காடு மாணவர்களும், தமிழ்வழிக் கல்வி பயின்ற 19.79 விழுக்காடு மாணவர்களும் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், நீட் அறிமுகப்படுத்திய பின், 2017இல் அனுமதி பெற்ற 98.41 விழுக்காடு பேர் ஆங்கிலவழி கல்வி பயின்றவர்கள். தமிழ் வழிக் கல்வி பயின்ற மாணவர்களில் 1.6 விழுக்காடு மட்டுமே கல்லூரி யில் இடம் பிடித்தனர். எடுத்துக்காட்டாக, நீட்டிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தரவுகள் இத்தேர்வு முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கு இல்லாமல் முதல் தலைமுறை யல்லாத பட்டதாரிகளுக்கு பெருமளவு சாதகமாக அமைந்துள்ளதைக் காண்பிக்கின்றனர்.

2010-2011இல், மருத்துவக் கல்லூரியில் இடம் பிடித்த முதல் தலைமுறை போட்டியாளர்களின் விழுக்காடு 24.61 விழுக்காடாக இருந்தது (முதல் தலைமுறையல்லாத போட்டியாளர்களின் விழுக்காடு 75 விழுக்காடாக இருந்தது). 2017ல், நீட்டிற்குப் பிறகு, இந்த விழுக்காடு வேகமாக சரிந்து, முதல் தலைமுறை மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் இடம் பிடிப்பது 14.46 விழுக்காடாகி, மீதி பெரும்பாகமான 85.54 விழுக்காடு இடங்கள் முதல் தலைமுறை யல்லாத மாணவர்க ளுக்கு விடப்பட்டது. அதேபோல், நீட் தேர்வில் தேர்ச்சி பெறும் பெரும்பாலான மாணவர்கள் சிபிஎஸ்இ பின்புலத்திலிருந்து வருவதாகவே தெரிகிறது பெரும் பாலான சி.பி.எஸ்.இ. பள்ளிகள் அதிக கட்டணமுடையவையாக உள்ளன. அதே நேரம், சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் படிப்பதை நிர்பந்திப்பது, நமது குழந்தைகள், ஆளும் பா.ஜ.க. அரசு தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு (NCERT) பாடத்திட்டத்தில் திணித்துவரும் பிரச்சாரத்தை, கற்றுக்கொள்ள வழி செய்யும்.

தி வாஷிங்டன் டைம்ஸ் மற்றும் புளூம்பெர்க் நடத்திய ஒரு ஆய்வு, பெரும்பணக்காரக் குடும்பத்திலிருந்து (உச்சி 1 விழுக்காடு) வரும் ஒருவர் ஐவி லீக் பள்ளியில் படிப்பதற்கான வாய்ப்பு, வறிய குடும்பத்திலிருந்து (கீழ் 20 விழுக்காடு) வரும் ஒருவரை விட 77 மடங்கு அதிகம் என்று காட்டுகிறது.

வசதி படைத்த பின்புலத்திலிருந்து வருபவர்களால், வருடத்திற்கு 1 இலட்சம் வரை கட்டணம் வசூலிக்கும் தனியார் சிறப்பு பயிற்சி பெற முடியும். 2005இல் நடந்த ஒரு ஐ.ஐ.டி. ஆய்வு, ஐஐடிக்கு தேர்ச்சி பெற்றதில் 95 விழுக்காடு மாணவர்கள் தனியார் பயிற்சி வகுப்புகளுக்குச் சென்றதாகவும், அதில் 75 விழுக்காடு நகர்ப்புற பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தது. அதிர்ச்சியூட்டும் விதமாக, பத்தாண்டுகளுக்கு முன்பு வரை ஐ.ஐ.டி. சென்றவர்களில் ஆறில் ஒருவர் (1/6) கோட்டாவிலுள்ள பன்சால் வகுப்புகள் எனும் ஒரு பயிற்சி நிறுவனத்திலிருந்து வந்தவர்கள். இத்தகைய நிறுவனங்கள் சில, வருடத்திற்கு 1 இலட்சத்திலிருந்து 2 இலட்சம் வரை வசூலிக்கின்றன. இது பெரும்பான்மை இந்தியர்களால் செலுத்தவியலாத ஒரு தொகை. எனவே தான், ஐ.ஐ.டி.யில் அனுமதிக்கப்படுபவர்களில் வெறும் 2.86 விழுக்காடு மாணவர்களே நலிந்த/கிராமப்புற, படிக்காத குடும்பத்திலிருந்து வருப வர்கள். அகில இந்திய பொறியியல் நுழைவுத் தேர்வில் (AIEEE) வெற்றி பெற்றவரான ஆசிரியர், 2000ங்களின் நடுவில், நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் சேர்ந்த மாணவர்களில் 70 விழுக்காடு சென்னையைச் சேர்ந்தவர்கள், அதிலும் குறிப்பான சில பள்ளிகளிலிருந்து வந்தவர்கள் என்று கூறுகிறார்.

தமிழ்நாட்டின் கிராமப்புறத்தில், மிகவும் வறிய தலித் குடும்பத்தில் பிறந்த அனிதா, சிறுவயதிலேயே தனது தாயை இழந்து விட்டார்; அவரது தந்தை ஒரு கூலித் தொழிலாளி. இத்துனை உள்ளார்ந்த சார்புகளை யும் மீறி, பள்ளித் தேர்வுகளில் 1200க்கு 1176 எடுத்து முதல் 0.3 சதவீதத்தில் தேர்ச்சி பெற அனிதாவினால் முடிந்தது. நீட் இல்லாது போயிருந்தால், அவரது பள்ளி மதிப்பெண்கள் கொண்டே, தமிழ்நாட்டின் தலை சிறந்த மருத்துவக் கல்லூரியொன்றில் படித்து, தனது சமூகத்தில் முதல் மருத்துவராக வந்திருப்பார். நீட் தேர்வில் தேர்ச்சி பெறாமல் அனிதாவை தடுத்தது அவரது திறனின்மையா அல்லது வாய்ப்புகள், வளங்கள் மற்றும் நேரப் பற்றாக்குறையா? கண்டிப்பாக அது நேர, வள மற்றும் வாய்ப்புகள் பற்றாக்குறையே. தனது கனவை நோக்கி முன்னேறும் வாய்ப்பை அவருக்கு அளித்திருந்தால், பயிற்சி நிலையத்தின் உதவி கொண்டு நீட் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றவரை விட சிறப்பாக செயலாற்றும் நிலையில் அனிதா இருந்திருப்பார்.

**சேலம் தரணிதரன்**
**கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர்**



ஆனால், நீட் தேர்வு கொண்டு நாம் அனிதாவிற்கு மட்டுமல்லாது ஒரு முழு சமுதாயத்தின் இலட்சியத்திற்கே துரோகம் இழைத்திருக்கிறோம். நீட்தொடர்பான தற்கொலைகள், பதற்றம் காரணமானவையன்று; அவை இலட்சியம் மற்றும் நம்பிக்கை பறிக்கப்படுவதன் விளைவாக நிகழ்பவை. இதனாலேயே, பெரும்பாலான நீட் இறப்புகள் கிராமப்புற மற்றும் விளிம்புநிலை பின்புலம் கொண்டவர்களி டையே நிகழ்கின்றன. நீட் தேர்வின் தொடர்ச்சி தமிழ்நாட்டில் வழக்க மாக உருவாவதை விட நகர்ப்புறத்திலிருந்து அளவிற் கதிகமான மருத்துவர்களை உருவாக்கி, கிராமப் புறத்தில் மருத்துவர்களுக்கான பற்றாக்குறைக்கு இட்டுச் செல்லும், மேலும், நீட் ஆயிரக்கணக்கான கிராமப்புற, விளிம்புநிலை மாணவர்களின் கனவுகளையும் சிதைக்கும்.

தமிழ்நாடு இந்திய மாநிலங்களின் சுகாதார விளைவுகளின் தரவரிசையில், தொடர்ந்து முதல் 3 இடங்களில் இருந்து வருகிறது. தமிழ் நாடு, மக்கள் தொகைக்கு அதிகமான மருத்துவர்கள் இருக்கும் மாநிலமாக மட்டுமல்லாமல்,மருத்துவர்களின் சிறந்த இடஞ்சார்ந்த நியமனப் பகிர்வு [SPATIAL DISTRIBUTION] உடைய மாநிலமாகவும் உள்ளது. இவை நுழைவுத் தேர்வுகள் ரத்து செய்தல், சாதி அடிப்படை/இட ஒதுக்கீடு (கிராமப்புற/அரசுப் பள்ளி மாணவர்க ளுக்கான இட ஒதுக்கீடு) மற்றும் தமிழ்நாட்டில் பல இடங்களில் மருத்துவப் பல்கலைக்கழகங்கள் தொ டங்குவது போன்ற தலையீடுகளினால் சாதித்தவை. அதுவும், தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை, இந்தியாவின் மருத்துவச்சுற்றுலா மையமாக விளங்குகிறது. இது போன்று சுகாதாரத் துறையில் பொறாமைப்படக் கூடிய அளவிற்கான முன்னேற்றத்தைக் கண்டுள்ள மாநிலம், ஒன்றிய அரசினால் அதன் வெற்றி கரமான முன்னேற்ற மாதிரியிலிருந்து விலகுமாறு நிர்பந்திக்கப்படவேண்டும்?

மாறாக, தமிழ்நாடு இந்தியாவிற்கான முன்மாதிரி யாக ஆக்கப்பட்டு, ஒன்றிய அரசு தமிழ்நாடு மாதிரியை பிற மாநிலங்கள் பின்பற்றுமாறு பரிந்துரைக்க வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகள் போன்ற பன்முகத்தன்மை கொண்டநாடு இந்தியா; மாநிலங்களுக்கிடையிலான முன்னேற்ற நிலைகளில்பெரும் வேறுபாடு உள்ளது. உதாரணமாக, தமிழ்நாட்டில், ஜார்க்கண்டை விட 32 மடங்கு மக்கள் தொகைக்கு அதிக மருத்துவர்கள் இருக்கிறார்கள். மாநிலங்களிடையே இத்தகைய வேறு பாடுகள் நிலவும்போது, ஒன்றிய அரசு இத்தகைய பன்முகத்தன்மைவாய்ந்த நாட்டிற்கு எவ்வாறு ஒரே சேர்க்கை

வழிமுறையை உருவாக்க முயற்சிக்க முடியும்? பொதுச் சுகாதாரம் மாநிலப் பட்டியலிலும், கல்வி ஒருங்கியல் பட்டியலிலும் இருக்கும் நிலையில், தமிழ் நாடு அரசு சட்டசபையில் இயற்றிய சட்டத்தினை குடியர சுத் தலைவர் பாராட்டி அதற்கு தனது ஒப்புதலையும் தருவதே நியாயம். தமிழ்நாட்டில் நீட் தேர்வு இனியும் தொடர்வது, நீதியைக் கேலிக்கூத்தாக்கி, கூட்டாட்சி முறையை அவமதிப்பதாகும்.

### இணைய உலகத்தில் பலதரப்பட்ட குற்றங்கள் நடக்கின்றன! பிரச்சினைகளுக்காக முடங்கிவிடக் கூடாது!

# நம்மை பாதுகாத்துக் கொள்ள தொழில் நுட்பத்தை தெரிந்துகொள்வது அவசியம்!

## தூத்துக்குடியில் நடைபெற்ற கருத்தரங்கில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

**தூத்துக்குடி, ஆக. 23 -**

**தூத்துக்குடியில் உள்ள காமராஜ் கல்லூரியில், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மற்றும் தேசிய சைபர் பாதுகாப்பு ஆய்வு நிறுவனம் (NCSRC) சார்பில் நடைபெற்ற பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் குறித்த கருத்தரங்கத்தை 21.08.2023 - திங்கள் கிழமை அன்று, துவக்கி வைத்து, கருத்தரங்கில், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி உரையாற்றினார்.**

அவர் உரையாற்றும்போது, குறிப்பிட்டதாவது :

"சைபர் க்ரைம்" தொடர்பான கருத்தரங்கத்திலே இத்தனை மாணவர்களை காணும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இன்றைக்கு அறிவுதான் சக்தி. அதாவது Knowledge is power. ஒரு காலகட்டத்தில் பலசாலியாக இருந்தால் நீங்கள் பெரிய ஆள் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் இன்று அறிவாற்றல்தான் எல்லாவற்றையும் விட மிகச் சிறந்தது, வெற்றிகளை உறுதி செய்யக் கூடிய ஒன்றாக மாறிக் கொண்டிருக்கக் கூடிய சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனால் எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும் என்ற உணர்வோடு இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருக்கிறீர்கள்.

"சைபர் க்ரைம்" அதைத் தாண்டி ஆர்.டி.பி.சியல் இன்டெலிஜென்ஸ் வரை வந்துவிட்டதை இங்கே பேசியவர்கள் சுட்டிக் காட்டினார்கள். நாம் நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதில் அப்டேட் ஆக இருக்க வேண்டும். அது நல்ல விஷயமாக இருந்தாலும் கெட்ட விஷயமாக இருந்தாலும் நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். சைபர் க்ரைமில் இருந்து நம்மை எப்படி பாதுகாத்துக் கொள்வது என்பது பற்றிய சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

**செயற்கை நுண்ணறிவு!**

தொழில் நுட்பத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. அதுதான் நிதர்சனம், தொழில் நுட்பங்களின் வளர்ச்சியோடுதான் நாம் வாழ்ந்தாக வேண்டும். குறிப்பாக செல்போன் இல்லாமல் நம்மால் இப்போது வாழ முடியாது. செல்போனில் நீங்கள் குறிப்பிட்ட ஒரு விஷயத்தைத் தேடினீர்கள் என்றால் அது தொடர்பான தகவல்கள் வந்துகொண்டே இருக்கும். பல நேரங்களில் போனை பக்கத்தில் வைத்துவிட்டு நாம் பேசிக் கொண்டிருப்போம். நாம் பேசிக் கொண்டிருந்த பொருட்கள் பற்றிய விளம்பரங்கள் கூட நம் போனில் வரும். அந்த அளவுக்கு தொழில் நுட்பம் முன்னேறியிருக்கிறது. சில நேரம் நாம் மனிதர்களோடு பேசுகிறோமோ அல்லது ஆர்ட்டிபீசியல் இன்டெலிஜென்ஸோடு பேசுகிறோமா... நம்மிடம் பேசுவது மனிதர்களா இல்லை மெஷினா என்று தெரியாத அளவுக்கு தொழில் நுட்பம் வளர்ந்திருக்கிறது. அதனால் நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதெல்லாம் எனக்குத் தெரியாது, தேவையில்லை என்று சொல்லும் காலகட்டத்தில் நாம் வாழவில்லை. நம்மை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் இவற்றைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இன்னொன்று நாம் பெண்கள், நாம் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டியவர்கள் என்பதை சொல்லிச் சொல்லி வளர்த்திருப்பார்கள். 'நம் உடலைப் பார்த்து நாமே வெட்கப்பட வேண்டும். முழுதாக மூடிக் கொண்டுதான் வெளியே வரவேண்டும். ஏனென்றால் ஆண்கள் உங்களைத் தவறாகப் பார்ப்பதற்கும் நீங்கள்தான் பொறுப்பு' என்று சொல்லிதான் வளர்ப்பார்கள். பள்ளிகளில் கூட பெண் குழந்தைகள் ஃபுல்லாக சுடிதார் போட்டுக் கொண்டுதான் வரவேண்டும். கல்லூரிக்கு போனால் கூட நமக்கு பிடித்தமான உடைகளை அணிந்து செல்லக் கூடாது. யாராவது ஒரு பையன் பஸ் ஸ்டாப்பில் பார்த்தான் என்றால் அவன் கண்ணுக்கு உறுத்தாமல்தான் நாம் உடைகளை அணிந்து செல்ல வேண்டும்.

ஏனென்றால் எந்த பெண்ணையும் தவறாக பார்க்கக் கூடிய உரிமை உனக்கு கிடையாது என்று அந்த சகோதரர்களுக்கு சொலித் தந்து வளர்க்கவில்லை. ஆனால் பெண்களுக்கு? நீ பத்திரமா இரு, நீ இப்படி இரு, நீ வெளியே போகாதே என்று சொல்லித் தருகிறார்கள். இந்தத் தடைகளை உடைக்க வேண்டிய காலத்திலே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இதையெல்லாம் தாண்டிப் போக வேண்டும் என்ற காலகட்டத்திலே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சில தடைகள் வரும்.' வீட்டுக்கு உள்ளே இருக்கும் பெண்களுக்கு மட்டும் ஆபத்து வராது என்று நினைக்காதீர்கள். வீட்டுக்குள் கொண்டுவந்து கேமரா வைத்தால் என்ன செய்ய முடியும்?

எல்லா இடங்களிலும் பிரச்சினை வரத்தான் செய்யும். அந்த பிரச்சினைகளுக்காக நாம் முடங்கிப் போய்விடக் கூடாது. நாம் பிறக்கும்போது நம்மோடு பிறந்தது இந்த உடல். அதை வைத்து நம்மை யாரும் கொச்சைப்படுத்த நாம் அனுமதிக்கக் கூடாது. என் உடல் எப்படி இருக்கிறதோ அதை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த உறுதி நமக்கு இருக்க வேண்டும். உடலை வைத்து நம்மை கேலி செய்ய யாரையும் அனுமதிக்கக் கூடாது.

ஒரு படத்தை சோசியல் மீடியாவில் போடுவீர்கள். அதற்கு லைக் வரவில்லை, யாரும் பாராட்டி கமெண்ட் போடவில்லை என்பதற்காகவெல்லாம் கவலைப்படாதீர்கள். முதலில் உங்களை நீங்கள் பாராட்டிக் கொள்ளுங்கள். உங்களை முதலில் நீங்கள் மதிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். இதுதான் மிக முக்கியமான அடிப்படையான விஷயமும் கூட.



அடுத்து நம் உடலை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நான் பெண், நான் இப்படித்தான் படைக்கப்பட்டிருக்கிறேன். இயற்கை என்னை இப்படித்தான் உருவாக்கியிருக்கிறது என்ற அந்த பெருமிதமும், திமிரும் இங்கே இருக்கக் கூடிய ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்க வேண்டும். அதை வைத்துக் கொண்டு உங்களை யாரும் மிரட்டவோ அச்சுறுத்தவோ அனுமதிக்கக் கூடாது.

**வாழ்வே ஒரு கற்றுக் கொள்ளல்தான்!**

நாம் இருக்கும் வரைதான் வாழ்க்கை. முன்பு இப்படி இருந்தோம் மரணத்துக்குப் பிறகு அப்படி இருப்போம் என்பதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. இந்த வாழ்க்கையிலே உங்களை ஜட்ஜ் பண்ணுவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. எல்லாரும் எல்லாமும் தெரிந்துகொண்டு பிறப்பதில்லை. தவறு செய்வோம்தான். வாழ்வே ஒரு கற்றுக் கொள்ளல்தான். யாரையாவது நம்புவோம், பெரியவர்கள் கூட ஒரு சில விஷயங்களைச் செய்யச் சொல்லுவார்கள். அவர்களை நம்பிச் செய்வோம். அது தவறாகப் போய்விடும். ஆனால் அதன் விளைவுகளை நாம்தான் அனுபவிப்போம்.

சாதி பற்றி பல குடும்பங்களில் சொல்லித் தருகிறார்கள். அது மிகத் தவறானதும் கேவலமானதும் ஆகும். அதனால் ஏற்படும் விளைவுகளை நாம்தான் எதிர்கொண்டு வருகிறோம். அப்படி தவறுகளை செய்யும்போது அதை தாண்ட முடியாது என்று தயவு செய்து நினைக்காதீர்கள். உங்களால் முடியும். காலம் எல்லாவற்றையும் குணமாக்கும். பத்து வருடம், இருபது வருடம் முன்னாடி இந்த பொண்ணோட படம் வந்தது என்றால் சொல்லிவிட்டுப் போகட்டும். அது ஒரு விஷயமே இல்லை.

இன்றைக்கு இந்த சமூகத்திலே இருக்கும் பெண் சாதனையாளர்கள் யாரை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். மறைந்த தலைவர்களாக இருக்கட்டும், இப்போது இருக்கக் கூடியவர்களாகட்டும், பெரிய சி.இ.ஒக்களாக இருக்கட்டும், டாக்டர்களாக இருக்கட்டும்... எழுத்தாளர்களாக இருக்கட்டும். அவர்களைப் பற்றி சோசியல் மீடியாக்களிலோ பத்திரிகைகளிலோ வராத தவறான விஷயங்கள் எதுவுமே கிடையாது. அதையெல்லாம் தாண்டி சாதித்த பெண்களைத்தான் நாம் இந்த சமூகத்தில் தலைவர்களாக பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதனால் யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் பேசட்டும், பக்கத்து வீட்டில் பேசட்டும், ஸ்கூலில் பேசட்டும், ஊரில் பேசட்டும், நாட்டில் பேசட்டும், உலகத்தில் பேசட்டும்... அதைப் பற்றி கவலைப்படாதீர்கள். நான் அதுபற்றியெல்லாம் அலட்டிக் கொள்ள மாட்டேன் என்ற தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**இணையவழி கடத்தல் பிரச்சினைகள்!**

ஒரு பையன் சோஷியல் மீடியாவில் ஒரு பெண்ணை சந்திக்கிறான். அவள் வெளிநாட்டில் இருக்கிற பெண். உன்னை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது, என்னுடைய சொத்துகளை எல்லாம் விற்றுவிட்டு உன்னுடன் இந்தியாவில் இருக்க வரப் போகிறேன் என்று சொல்லி வருகிறாள். அதன் பிறகு, 'நான் கொண்டுவந்த பணமெல்லாம் மாட்டிக் கொண்டது. அதனால் இவ்வளவு பணம் அனுப்பு. நான் பிரச்சினையை தீர்த்துவிட்டு உன்னிடம் வருகிறேன்' என்று சொல்லி மெசேஜ் அனுப்புகிறாள். இதுபோல் சொல்லி தொடர்ந்து அந்த பையனிடம் இருந்து காசு வாங்கிக் கொண்டே இருந்திருக்கிறாள். ஒரு கட்டத்திலே அந்த பையனுக்கு சந்தேகம் வந்து போய் புகார் கொடுக்கிறான். அதன் பிறகுதான் தெரிகிறது. ஹைதராபாத்தில் இருந்து மூன்று ஆண்கள் இதை செய்துகொண்டிருக்கிறார்கள்.

இதுபோல் இணைய உலகத்திலே பலதரப்பட்ட குற்றங்கள் நடக்கின்றன. உங்களை நண்பர் ஆக்கிக் கொண்டு இந்த இடத்துக்கு வா என்று அழைத்து உங்களை கடத்திக் கொண்டு செல்வது. குழந்தைகளாகட்டும், பெண்களாகட்டும், ஆண்களுக்கு கூட இந்த இணைய வழி கடத்தல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

அதனால் இந்த உலகத்தில் தொழில்நுட்பம் மூலமாக என்னென்ன தவறுகள் நடக்கின்றன என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். நம் படத்தை எடுத்து வைத்துக் கொண்டு சோசியல் மீடியாவில் வெளியிட்டுவிடுவேன் என்று மிரட்டினால்.... சோஷியல் மீடியாவில் வந்துவிட்டால் அது காலத்துக்கும் அழியாது என்றெல்லாம் பயப்படாதீர்கள். முதலில் புகார் கொடுங்கள். நீங்கள் வேலை பார்க்கும் இடத்திலோ, பெற்றோர்களிடத்திலோ, இல்லையென்றால் போலீசிடமோ போய் புகார் கொடுங்கள். மேலும் மேலும் போய் நீங்கள் அதற்குள் போய் சிக்கிக் கொள்ளக் கூடாது. உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நீங்கள் போராடத் தயாராக இருங்கள்.

**பெரியாருக்குத்தான் தைரியம் இருந்தது!**

உங்களுடைய வாழ்க்கையை நீங்கள் விரும்பும் வகையில் அமைத்துக் கொள்ளக் கூடிய உரிமை உங்களுக்கு இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். உங்களைப் பற்றி முடிவெடுக்க வேறு யாருக்கும் உரிமை கிடையாது. இதைத்தான் தந்தை பெரியார் தன் வாழ்க்கை முழுதும் சொல்லிக் கொண்டிருந்தார். பல தலைவர்கள் இருக்கிறார்கள். பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படும் நேரத்தில் பெண்களையே கொச்சைப்படுத்தும் படி பேசுகிறார்கள். வடநாட்டிலே இருக்கும் தலைவர்கள் பெண்களைப் பார்த்து, 'நீ ஏன் அங்கே போனே?' என்றெல்லாம் கேட்கிறார்கள். என்னை முழுமையாக மறைத்து உடையணியவும் எனக்கு உரிமை இருக்கிறது. எனக்குப் பிடித்திருக்கிறது என்றால் ஜீன்ஸ் அணியவும், ஸ்கர்ட் அணியவும், ஷார்ட்ஸ் அணியவும் எனக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இதையெல்லாம் கூட கொச்சைப்படுத்தும் தலைவர்கள் இருக்கிறார்கள்.

ஆனால்... தந்தை பெரியார் மட்டும்தான், 'உன்னைத் தடுக்கக் கூடிய எல்லாவற்றையும் நீ தூக்கி எறி' என்று கூறினார். இப்படி சொல்லக் கூடிய தைரியம் ஒருவருக்கு இருந்தது என்றால் அது பெரியார் ஒருவருக்குத்தான். உங்களுக்கு வரக் கூடிய சவால்களை எல்லாம் கடக்க வேண்டும் என்றால் முதலில் நீங்கள் பெரியாரைப் படியுங்கள். தன்னம்பிக்கையாக இருங்கள். உங்களை மீறி உலகமே கிடையாது. அதில் உங்களுக்கு பிடித்த உலகத்தை நீங்கள் நினைத்த உலகத்தை உங்களுக்காக நீங்கள் உருவாக்கிக் கொள்ளுங்கள்".

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான கீதா ஜீவன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மகளிர் ஆணையத் தலைவர் குமரி விஜயகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாலாஜி சரவணன், NCSRC இயக்குநர் காளிராஜ், கல்லூரி செயலர் சோமசுந்தரம், கல்லூரி முதல்வர் பூங்கொடி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

---

### திருநெல்வேலி - கிருஷ்ணகிரி மாவட்டங்களில்

## கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலைய கட்டடங்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 23 -

திருநெல்வேலி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ரூ.5.50 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கோஆப்டெக்ஸ் விற்பனை கட்டடங்கள் மற்றும் ரூ.2.28 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள மூன்று சாயக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய சாயச்சாலை கட்டடங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.08.2023) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை சார்பில் திருநெல்வேலியில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோஆப்டெக்ஸின் வணிக வளாகம், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோஆப்டெக்ஸின் விற்பனை நிலையம் மற்றும் 2 கோடியே 28 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மூன்று மாவட்ட அளவிலான சாயக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய சாயச்சாலை கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் கைத்தறி தொழில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையும், உயரிய பாரம்பரிய சிறப்பும், தனித்துவ வேலைப்பாடுகளும் கொண்டது. கைத்தறி தொழிலில் இந்திய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்வதுடன், உலகளவில் பிரசித்தி பெற்ற கைத்தறி இரகங்கள் நெசவாளர்களால் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாடு அரசின் மேற்பார்வையின் கீழ் 1107 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மூலம் நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பும், உத்திரவாதமான கூலியும், பல்வேறு நலத்திட்ட உதவிகளும் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகவும், நெசவாளர்களின் நலனுக்காகவும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நெசவாளர்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த உதவும் வகையில், விருதுநகர் மாபெரும் கைத்தறி குழும திட்டத்தின் கீழ், திருநெல்வேலியில் 9,320 சதுர அடி பரப்பளவில் 4 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கோஆப்டெக்ஸின் வணிக வளாகம், கைத்தறி ஆதரவு திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் 1,900 சதுர அடி பரப்பளவில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கோஆப்டெக்ஸின் விற்பனை நிலையக் கட்டடத்தையும் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், நெசவாளர்களுக்கு வழங்கப்படும் நூலினை தரமான முறையில் சாயமிட்டு வழங்க ஏதுவாக, விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமத் திட்டம் (Virudhunagar Mega Handloom Cluster Scheme) மற்றும் கைத்தறி ஆதரவு திட்டம் நிதியுதவியுடன் மதுரை மாவட்டம், தொட்டியபட்டியில் 72 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவிலும், சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் 84 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் செலவிலும், தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலில் 72 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் செலவிலும், என மொத்தம் 2 கோடியே 28 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மூன்று மாவட்ட அளவிலான சாயக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய சாயச்சாலை கட்டடங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறி துறை ஆணையர் கே.விவேகானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### கடலூர் மாவட்டம் - சாலை விபத்தில்

## உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**ன்னை, ஆக.23–**

**கடலூர் மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறியுள்ளார். அவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்கள், நேற்று முன்தினம் விடுத்த அறிவிப்பு வருமாறு:-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், இராசாக்குப்பம் மதுரா, ரோட்டான்டிக்குப்பம் கிராமம், விருத்தாசலம் - கடலூர் தேசிய நெடுஞ்சாலையின் புறவழிச்சாலை அருகே 21.8.2023 அன்று மதியம் கடலூரிலிருந்து விருத்தாசலம் நோக்கி சென்ற தனியார் பேருந்தும், வடலூரிலிருந்து குறிஞ்சிப்பாடி நோக்கி வந்த காரும் எதிர்பாராத விதமாக மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. மேலும், விபத்து நடந்த நேரத்தில் அவ்வழியாக வடலூரிலிருந்து குறிஞ்சிப்பாடிக்குச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீதும் பேருந்து மோதியுள்ளது.

இவ்விபத்தில் காரில் பயணம் செய்த திருமதி.விக்டோரியா, க/பெ.அந்தோணிசாமி (வயது 65) என்பவரும், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த புவனகிரி வட்டம், சாத்தப்பாடி கிராமத்தைச் சேர்ந்த விஜயகுமார், த/பெ. ஏழுப்பன் (வயது 24) மற்றும் தாமரைச்செல்வன், த/பெ.கோதண்டபாணி (வயது 23) ஆகிய மூவரும் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம், பண்டாரம்பட்டி அருகில் உள்ள எஸ்.வி.குளம் கரையில் தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு புதிதாக அமைக்கப்பட்டுள்ள நடைப்பயிற்சி தளத்தை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, நடைபயிற்சி தளத்தைச் சுற்றிலும் மரக்கன்றுகள் நடும் பணியை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட மாடன்குளத்தை சுற்றிலும் நடைபயிற்சி தளம் அமைப்பது குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளருமான பெ. கீதா ஜீவன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் தினேஷ்குமார், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## ‘நீட்’ தேர்வு ரத்தாகும் வரை

# நம் சட்டப் போராட்டமும் அறவழிப் போராட்டமும் தொடரும்!

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**மதுராந்தகம், ஆக.23 -**

**நீட் தேர்வு ரத்தாகும் வரை நமது சட்டப் போராட்டமும், அறவழிப்போராட்டமும் தொடரும் என்று இளைஞர் அணிச் செயலாளர்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் மதுராந்தகத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.**

அவர் பேசியது வருமாறு:-

நம்முடைய இயக்கத்தில் செயல்படக் கூடிய முதன்மையான அணி எதுவென்றால், அது நம்முடைய இளைஞர் அணிதான்.

தலைமைக் கழகம் ஒப்படைக்கக்கூடிய பணிகளாக இருந்தாலும் சரி, மாவட்டக் கழகம் ஒப்படைக்கின்ற பணிகளாக இருந்தாலும் சரி, அந்தப் பணிகளையெல்லாம் மிகச்சிறப்பாக முடித்துக் காட்டுபவர்கள் நம்முடைய இளைஞர் அணி சகோதரர்கள்தான்.

அந்த வகையில் செயல்வீரர்களுக்கான கூட்டம் என்பது, இளைஞர் அணிக்கு இந்தக் கூட்டத்திற்கு பொருத்தமாகவும் சரியாகவும் இருக்கும். இந்த மாவட்டத்தினுடைய முதன்மையான செயல்வீரர் யார் என்று பார்த்தால், நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் சுந்தர் அவர்கள்தான்.

நான் ஏதோ, பேச்சுக்காகவோ அவரை இங்கே பெருமைப்படுத்துவதற்காகவோ இதை நான் சொல்லவில்லை. அதற்கு உதாரணம், ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினர், தொடர்ந்து மாவட்டக் கழகச் செயலாளர். ஆனாலும், அந்த அனுபவப் பெருமை எதுவும் இல்லாமல், அலட்டிக் கொள்ளாமல் கழகப் பணிகளைச் செய்து முடிப்பதில் முதன்மையானவர்.

எந்தப் பணியாக இருந்தாலும், அத்தனை மாவட்டச் செயலாளர்களுக்கும் எடுத்துக்காட்டாக, விளங்கக்கூடியவர்தான் சுந்தர் அவர்கள்.

இளைஞர் அணியினுடைய இரண்டாவது மாநில மாநாட்டை ஒட்டி நடைபெறவுள்ள இளைஞர் அணியினுடைய முதல் செயல்வீரர்கள் கூட்டம் இது.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று இந்தச் செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தப் போகிறேன். அதனால் தான் முதல் செயல்வீரர் கூட்டத்தை, காஞ்சிபுரத்தைத் தேர்வு செய்ததற்கு அதுவும் மிக முக்கியமான ஒரு காரணம்.

இளைஞர் அணிக்கு அந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கழகப் பணி ஆற்றும் மாவட்டச் செயலாளர்களில் சுந்தர்தான் முதன்மையான மாவட்டச் செயலாளர் ஆவார்.

நான் 2019ஆம் ஆண்டு கழகத்தினுடைய இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்கும்போது தலைவர் அவர்கள் என்னிடத்திலே ஒரு இலக்கு கொடுத்தார்கள்.

இளைஞர் அணிக்காக ஒரு தொகுதிக்கு 10 ஆயிரம் பேரை நீ உறுப்பினராகச் சேர்க்க வேண்டும் என்றார். அப்போது அந்தப் பணியை முடித்த முதல் மாவட்டம், இந்த காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம். அதற்குக் காரணம் நம்முடைய அமைச்சர் மாவட்டக்கழகச் செயலாளர் அண்ணன்.

அதைத்தொடர்ந்து ஊராட்சிக் கிளைகளிலும் மாநகர, நகர, பேரூர் வார்டுகளிலும் இளைஞரணிக்கு நிர்வாகிகளை நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம். அதையும் தமிழ்நாட்டிலேயே முதலில் முடித்துக் கொடுத்தவர் நம்முடைய சுந்தர் அவர்கள் தான்.

அதேபோல் பேராசிரியர் நூற்றாண்டைத் தொடர்ந்து பாசறை நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும் என்று சொன்னோம். அதையும் முடித்துக்கொடுத்தவர் நம்முடைய மாவட்டக்கழகச் செயலாளர் அவர்கள்.

அதேபோல், உள்ளாட்சித் தேர்தல்களிலும் கழகத்தினுடைய அமைப்புத் தேர்தல்களிலும் இளைஞர் அணிக்கு அதிகளவில் பிரதிநிதித்துவம் அளித்தவரும் அண்ணன் அவர்கள் தான். இளைஞர் அணி சார்பில், தலைவருடைய கட்டளையை ஏற்று, திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தைத் தொகுதி வாரியாக நடத்த வேண்டுமென்று தலைவர் அவர்கள் அறிவித்தார்.

ஆனால், நம்முடைய அண்ணன் சுந்தர் அவர்கள் நாங்கள் ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக நடத்திக் காட்டுகிறோம் என்று இங்குள்ள நான்கு தொகுதிகளில் தமிழ்நாட்டிலேயே அதிகமாக 19 கூட்டங்களை திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டத்தை நடத்தி காட்டினார்.

நம்முடைய இளைஞர் அணிக்கு உறுதுணையாக என்றும் இருப்பவர்தான் அண்ணன் அவர்கள்.

### கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

கழகத்தை வளர்த்தெடுத்த கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சி.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் மதுராந்தகத்தில் மாநாடுபோல் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நல உதவிகள் வழங்கி எழுச்சியுரையாற்றினார். உடன் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாலும் எனக்கு மனதிற்கு மிகவும் நெருக்கமான நிகழ்ச்சி. எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், எந்தப் பயணமாக இருந்தாலும் அந்த மாவட்ட கழகச் செயலாளர்களிடத்திலே ஒரே ஒரு அன்புக் கட்டளைதான்.

எத்தனை நிகழ்ச்சி வேண்டுமானாலும் நடத்துங்கள் நான் கலந்து கொள்கிறேன். ஆனால், எனக்காக, என்னுடைய ஆசைக்காக என்னுடைய மனத் திருப்திக்காக ஒரு நிகழ்ச்சி நடத்த வேண்டும். கழகத்திற்காக உழைத்த இரத்தம் சிந்திய, வேர்வை சிந்திய கழகத்தினுடைய மூத்த முன்னோடிகளை, நீங்கள் பெருமைப்படுத்த வேண்டும். பொற்கிழி வழங்க வேண்டும் என்று அந்தக் கட்டளையிடுவேன்.

எல்லா மாவட்டத்திலும் ஒரு ஒரு நிகழ்ச்சி நடத்துவாங்க, இன்னும் சில மாவட்டங்களில் நிகழ்ச்சி நடத்தவில்லை. நான் இன்னும் தேதி கொடுக்கவில்லை. ஆனால், அண்ணன் சுந்தர் அவர்கள் இதுவரை மூன்றுமுறை அந்த நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறார். நாம் எதிர்க்கட்சியாக இருந்தபோதே ஆயிரத்து இருபது கழக மூத்த முன்னோடிகளுக்குத் தலா 5 ஆயிரம் ரூபாய் பொற்கிழி வழங்கினார்.

அதைத்தொடர்ந்து ஒன்றரை வருடங்களுக்கு முன்பு இரண்டாயிரத்து எண்பது மூத்த முன்னோடிகளுக்குத் தலா 15 ஆயிரம் ரூபாய் வழங்கினார்.

இன்று இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு முத்தமிழறிஞர் கலைஞருடைய சிலையை திறக்கின்ற ஒரு வாய்ப்பு. அதற்கும் இந்த நேரத்திலே அண்ணன் சுந்தர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதை முடித்துவிட்டு, இன்றும் மீண்டும் 1,000 கழக மூத்த முன்னோடிகளுக்குப் பத்தாயிரம் ரூபாய் பொற்கிழியை வழங்கியிருக்கின்றார்.

இப்படி எந்தப் பணியாக இருந்தாலும், அதுவும் குறிப்பாக இளைஞர் அணி பணியென்றால், நம்முடைய நிர்வாகிகளுக்கு உறுதுணையாக இருந்து அவர்களையெல்லாம் வளர்த்தெடுப்பதில் முக்கியப் பங்கு ஆற்றக்கூடிய அண்ணன் சுந்தர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய மாநாட்டுக்கான செலவு, மாவட்டக் கழகத்தின் சார்பாக ரூபாய் ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கின்றார். அவருக்கு இந்த இளைஞர் அணியின் சார்பாக நன்றி.

மாவட்ட இளைஞர் அணியின் சார்பாக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களெல்லாம் சேர்ந்து 10 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கின்றீர்கள் அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கழகத்தில் உழைப்பிற்கு ஏற்ற முன்னேற்றம் இருக்கும் என்பதற்கு, இந்த இளைஞர் அணியே போதுமான ஒரு சாட்சி. ஏனெனில், உழைப்பு, உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்றால், ஸ்டாலின் என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வாழ்த்தப்பட்டு, உருவாக்கப்பட்ட அணிதான் இந்த இளைஞர் அணி. அப்படிப்பட்ட இந்த இளைஞர் அணியில் உழைத்தால் மட்டும்தான் உயர்வு என்பதற்கு, இந்த மேடையே உங்களுக்குச் சான்று.

இன்று இந்த இளைஞர் அணியில் 9 பேர் மாநில துணைச்செயலாளர்களாகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். அந்த 9 பேரில் 8 பேர் ஏற்கனவே, மாவட்ட அமைப்பாளர்களாவும், ஒருவர் துணை அமைப்பாளராகவும் செயல்பட்டவர். திறம்படச் செயல்பட்டவர்கள். அவர்களுடைய உழைப்பிற்கு மதிப்பளிக்கும் வகையில்தான் நம்முடைய தலைவர் அவர்கள், அவர்களுக்குத் துணைச்செயலாளர்களாகப் பொறுப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணைஅமைப்பாளர் நேர்காணலில் தமிழ்நாடு முழுவதும் இருந்து 658 நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 452 பேர் ஏற்கனவே, இளைஞர் அணியில் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களாகப் பணியாற்றியவர்கள்.

யார், யார் சிறப்பாகப் பணியாற்றினார்கள் என்று தேடித்தேடிப் பார்த்து தலைவரினுடைய உத்தரவின் பேரில், ப்ரோமோஷன் கொடுத்திருக்கின்றோம்.

இந்த மேடையிலேயே எடுத்துக்கொள்ளுங்கள். தற்போதைய மாவட்ட அமைப்பாளர் திரு.யுவராஜ் அவர்கள், ஏற்கனவே சிறப்பாக மாவட்ட துணை அமைப்பாளராகச் செயல்பட்டவர். இப்போது அவர் மாவட்ட அமைப்பாளராகப் பொறுப்பேற்றிருக்கிறார்.

ஏற்கனவே, இளைஞர் அணியில் இருந்து சிறப்பாகப் பணியாற்றியவர்கள்தான் துணை அமைப்பாளர்களாக இன்று உயர்ந்துள்ளார்கள். இந்தச் சமயத்தில் சகோதரர் யுவராஜ் அவர்களுக்கும், மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்து வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல், சகோதரர் அப்துல் மாலிக் உறுப்பினர் சேர்க்கை, புதிய நிர்வாகிகள் தேர்வு, பாசறைக் கூட்டங்கள், இல்லந்தோறும் இளைஞர் அணி என மிகச்சிறப்பான அவருடைய பணியால், இன்று மாநில துணைச் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்.

உழைத்தால் உயர்வு உண்டு என்பதற்கு, அவர் சிறந்த எடுத்துக்காட்டு. கிளைச் செயலாளராகக் கழகப் பணியைத் தொடங்கியவர் இன்றைக்கு இளைஞர் அணியினுடைய மாநில துணைச் செயலாளராக அமர்ந்திருக்கின்றார்.

அதற்கு அவருடைய உழைப்பும், சுந்தர் அண்ணனுடைய ஒத்துழைப்பும்தான் முழுக் காரணம். அவருக்கும் இந்த மேடையிலே என்னுடைய வாழ்த்துக்களையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மண்டலத்தில் இளைஞர் அணி பணிகளை மிகச்சிறப்பாக ஒருங்கிணைக்கக் கூடிய இளைஞர் அணியினுடைய மாநில துணைச் செயலாளர் சகோதரர் பிரபு கஜேந்திரன் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இளைஞர் அணியினுடைய இந்தச் செயல்வீரர் கூட்டத்திற்காக உழைத்த மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் இங்கு எதற்காகக் கூடியிருக்கின்றோம், வரும் டிசம்பர் மாதம் சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞர் அணியினுடைய இரண்டாவது மாநில மாநாட்டை வெற்றி பெற வைக்க வேண்டும் என்ற அந்த ஒரே கோரிக்கையோடு, கொள்கையோடு இங்கு அமர்ந்திருக்கின்றோம். வெற்றிப்பெற வைக்க வேண்டுமென்றால், நீங்கள் அத்தனைபேரும் அந்த மாநாட்டிற்கு வந்தால்தான் அந்த மாநாடு வெற்றி பெறும்.

### இளைஞர் அணி மாநாடு!

நீங்கள் மட்டுமல்ல, கிட்டத்தட்ட இளைஞர் அணியில் இருக்கக்கூடிய அனைத்து தம்பிமார்களையும் நீங்கள் அழைத்து வந்தால்தான் அந்த மாநாடு மிகப்பெரிய வெற்றி அடையும். இங்கே அண்ணன் சுந்தர் அவர்கள் கிட்டத்தட்ட இந்த மாநாட்டில் 20 ஆயிரம் பேர் கலந்து கொள்வார்கள் என்று வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். கண்டிப்பாக அவர் சொல்வதை செய்து காட்டுவார் என்ற அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

உங்களுடன் ஒரு மகிழ்ச்சியான விஷயத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். நான் இளைஞர் அணி செயலாளராகப் பொறுப்பேற்றவுடன் சேர்க்கப்பட்ட இளைஞர் அணி உறுப்பினர்களுடைய மொத்த எண்ணிக்கை 25 இலட்சம். அவர்களில் சிறப்பாகப் பணியாற்றக்கூடியவர்கள்தான் ஊராட்சிகளிலுள்ள கிளைகளிலும், வார்டுகளிலும், அமைப்பாளர், துணை அமைப்பாளர்களாகத் தேர்வு செய்தோம்.

அப்படி இந்த காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் மட்டும் 6 ஆயிரத்து 500 நிர்வாகிகளைத் தேர்வு செய்துள்ளோம். இப்படி தமிழ்நாடு முழுவதும் 72 கழக மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட இளைஞர் அணியினுடைய நிர்வாகிகளின் எண்ணிக்கை மொத்தம் 4 இலட்சம். நம்முடைய இளைஞர் அணி மாநாட்டில் நிச்சயம் நம்முடைய நிர்வாகிகள் கலந்து கொள்வது உறுதி. எனவே, 4 இலட்சம் பேர் கலந்து கொள்ளப்போவது உறுதி. ஆனால், அது பத்தாது. குறைந்தது 10 இலட்சம் பேரையாவது நாம் அங்குத் திரட்டிட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் செயல்வீரர் கூட்டம்.

நூற்றாண்டு பெருமை கொண்டது நம்முடைய திராவிட இயக்கம். அதில் முக்கால் நூற்றாண்டு பெருமை கொண்டது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம். அதில் இளைஞர் அணிக்கு வயது 45. கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு கால வரலாறு கொண்டது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி. அதனால்தான் உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன், இந்த மாநாட்டிலே நீங்களெல்லாம் கலந்து கொண்டு மாநாட்டை மிகச்சிறப்பான ஒரு வெற்றி மாநாடாக நீங்களெல்லாம் மாற்ற வேண்டும் என்று உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாநாட்டிலே கலந்துகொண்டு கழக அரசினுடைய சாதனைகளையெல்லாம் நீங்கள் உள்வாங்கி, அதை மக்களிடத்திலே கொண்டுபோய்ச் சேர்த்து, தலைவர் அவர்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் எத்தனை வாக்குறுதிகளை நிறைவேற்றிருக்கிறார் என்பதையெல்லாம் புரிந்துகொண்டு இயக்கத்தினுடைய வரலாறு எல்லாம் தெரிந்து கொண்டு, கழகப்பணி ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதேநேரத்தில், நமக்கு எதிர்புறமாகவே, ஒரு மாநாடு நடத்துறாங்க, மதுரையிலே ஒரு மாநாடு நடக்கிறது. எனக்குத் தெரிந்து அந்த மாநாட்டில் என்ன சொல்வாங்க, எது எல்லாம் கத்துக்கொடுப்பாங்க, காலில் விழுவது எப்படி, காலை வாரிவிடுவது எப்படி, டேபிள் சேர்க்குள்ளே போவது எப்படி, கொள்ளை அடிப்பது எப்படி, இதெல்லாம் அந்த மாநாட்டிலே கருப்பொருளாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

மணிப்பூர் என்ற ஒரு மாநிலம் கிட்டத்தட்ட 5 மாதங்களாக பற்றி எரிகின்றது. அந்த மாநிலத்தை ஆள்வது ஒன்றிய பா.ஜ.க அரசு. திராவிட மாடல், திராவிட மாடல் என்று நம்முடைய தலைவர் அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். பல பேர் கேட்கிறார்கள்.

திராவிட மாடல் என்றால் என்னவென்று, நான் சொல்கிறேன். மணிப்பூரை ஆண்டு கொண்டிருப்பது பா.ஜ.க அரசு. ஒரு அரசே மக்களை இரண்டாகப் பிரித்து 5 மாதம் பிரச்சினை போய்க்கிட்டு இருக்கு, கிட்டத்தட்ட 500 பேர் இறந்திருக்கிறார்கள். தேவாலயங்கள் எல்லாம் இடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதைப்பற்றிப் பேசுவதற்கு நம்முடைய ஒன்றிய பிரதமர் அவர்களுக்குத் தைரியம் கிடையாது.

நாடாளுமன்றத்தை கூட்டி நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றிருக்கிறோம். இரண்டு மணி நேரம் நம்முடைய பிரதமர் மோடி அவர்கள் பேசுகிறார். அந்த இரண்டு மணி நேரத்திலே மணிப்பூரைப் பற்றி அவர் பேசியது வெறும் 5 நிமிடங்கள்.

தி.மு.க.வைப் பற்றிப் பேசியது கிட்டத்தட்ட 1 மணி நேரம். எந்தப் பகுதிக்குப் போனாலும், இந்தியாவினுடைய எந்தப் பகுதிக்குப் போனாலும் நம்முடைய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், எப்போது பார்த்தாலும் நம்முடைய தலைவர் அவர்களுடைய எண்ணம். தி.மு.க.வைப் பற்றியே அவர் பேசிக்கிட்டு இருப்பார்.

சமீபத்தில் சென்னைக்கு வந்தார் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்கள். அவரும் இங்கு வந்து என்னைப் பற்றித்தான் பேசிவிட்டு போய் இருக்கிறார். தி.மு.க ஆட்சிக்கு வந்தது என்றால், வாழ்வது வெறும் கலைஞர் குடும்பம்தான் என்று.

ஆமாம், இன்று நான் சொல்கிறேன். ஒட்டுமொத்த தமிழகமும் தலைவர் கலைஞர் அவர்களுடைய குடும்பம்தான். நீங்கள் ஆட்சிக்கு வந்த 9 வருடத்தில் யார் வாழ்ந்திருக்கிறார்கள். உங்களுடைய நெருங்கிய நண்பர் பேர் என்ன? ஆமா அதானி. நான் கூட அடிக்கடி சொல்வேன் பிரதமர் மோடி அவர்கள் இந்தியாவில் இருப்பதே மிகவும் குறைவான நேரம்தான். எப்போது பார்த்தாலும், வெளிநாட்டில்தான் சுற்றிக்கொண்டு இருப்பார்.

விமானத்துலத்தான் போவார். விமானி இல்லாமல் கூடப் போவாரு, ஆனால், அதானி இல்லாமல் போகமாட்டார்.

### பொதுத் துறைகள் அதானி வசம்!

இந்த அதானி குழுமம் ஆரம்பித்து, 9 வருடங்களிலேயே மிகப்பெரிய வளர்ச்சி. உலகப் பணக்காரர்கள் பட்டியலில் இரண்டாவது இடம். எல்லாப் பொதுத்துறையையும் தூக்கி, அதானிக்கிட்ட கொடுத்தாச்சு. அதானி ஏர் போர்ட், அதானி போர்ட், அதானி ஸ்டேடியம் எப்படி இந்த வளர்ச்சி.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.8.2023) தலைமைச் செயலகத்தில், சென்னையிலுள்ள தென் கொரியா நாட்டு துணைத் தூதர் சாங் நியுன் கிம் (Mr. Chang Nyun Kim) சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத்துறை செயலாளர் கே. நந்தகுமார், தென் கொரியா நாட்டு தூதரகத்தின் கலாச்சாரம் மற்றும் பொருளாதார ஆராய்ச்சியாளர் ஹுவாங் ஜூன் சிக் (Mr. Hwang Joon Sik), KOTRA இயக்குநர் ஜி ஹுவான் யுன் (Mr. Ji Hwan Eun) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.08.2023) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை சார்பில் திருநெல்வேலியில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோஆப்டெக்ஸின் வணிக வளாகம், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோஆப்டெக்ஸின் விற்பனை நிலையம் மற்றும் 2 கோடியே 28 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மூன்று மாவட்ட அளவிலான சாயக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய சாயச்சாலை கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறி துறை ஆணையர் கே.விவேகானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கோடிக்கணக்கான மக்களின் வாழ்வியலோடு பிணைந்து விட்ட சொல்!

# சென்னையை ஊர் என்பதா? உயிர் என்பதா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஆக. 23 - முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப்பதிவில் “கோடிக்கணக்கான மக்களின் வாழ்வியலோடு பிணைந்து விட்ட சொல் என்பதா? ஊர் என்பதா? உயிர் என்பதா? சென்னையை?” என்று புகழாரம் சூட்டியுள்ளார்.




இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

**பேரறிஞர் அண்ணா தமிழ் நிலத்துக்கு, தமிழ்நாடெனப் பெயர் சூட்டினார். தமிழினத் தலைவர் கலைஞர் தமிழ்நாட்டின் தலைநகருக்குச் சென்னை எனப் பெயர் மாற்றினார்!**

**கோடிக்கணக்கான மக்களின் வாழ்வியலோடு பிணைந்துவிட்ட சொல் என்பதா ஊர் என்பதா உயிர் என்பதா சென்னையை?**

**சென்னை ஒட்டுமொத்த இந்தியாவைப் பிரதிபலிக்கும் நிலைக் கண்ணாடி. பன்முகத் தன்மையின் சமத்துவச் சங்கமம்!**

**வாழிய வள்ளலார் சொன்ன ‘தருமமிகு சென்னை’!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தின கொண்டாட்டத்தை முன்னிட்டு நேற்று (22.08.2023) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில், சென்னை பள்ளி மாணவர்களின் “அக்கம் பக்கம்” என்ற புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், ‘தி இந்து’ குழுமத்தின் தலைவர் திருமதி நிர்மலா லஷ்மண், இயக்குநர்கள் என். ராம், என். முரளி, என்.ரவி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






அரியமங்கலம் பகுதி திமுக செயலாளர் ஏ.எம். ஜி. விஜய்குமார் இல்ல திருமண வரவேற்பு விழாவில் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

### அரிய மங்கலம் பகுதிக் கழகச் செயலாளர்

# ஏ.எம்.ஜி. விஜய்குமார் இல்ல மணவிழா வரவேற்பு!

### அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்பு!

திருச்சி, ஆக. 23 - திருச்சி அரியமங்கலம் பகுதி தி.மு.க. செயலாளர் ஏ.எம்.ஜி. விஜய்குமார் ஆசிரியை ஜி. சாந்தி தம்பதியரின் மகன் வி.சூர்யாவுக் கும், தஞ்சாவூர் அருளானந்த அம்மாள் நகர் பி செந்தில்வேலன் - எஸ். அமுதா செந்தில்வேலன் தம்பதியரின் மகள் எஸ். பிரசித்தாவுக்கும் பெற்றோர்களால் திருமணம் நிச்ச யக்கப்பட்டது. இவர்களின் திருமண வரவேற்பு விழா (திங்கட்கிழமை) திருச்சி மன்னார்புரம் வி.எஸ். எம்.மஹாலில் நடந்தது. திருச்சி தெற்கு மாவட்ட செயலாளரும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை தாங்கி, மணமக்களை வாழ்த்தினார். மாநகர தி.மு.க. செயலாளர் மு. மதிவாணன் வரவேற்றார். திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ. இனிகோ இருதயராஜ், மணப்பாறை சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ. அப்துல் சமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் தி.மு.க. இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி பேசினார். நிகழ்ச்சியில் திருச்சி எம்.பி திருநாவுக்கரசர், திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் சாக்கோட்டை அன்பழகன் எம்.எல்.ஏ., வண்ணை அரங்கநாதன், கே.என். சேகரன், சபியுல்லா, கவிஞர் சல்மா, என் செந்தில், என். கோவிந்தராஜ், செங்குட்டுவன், மூக்கன் லீலாவேலு, குணசேகரன், நூர்ஜகான், சந்திரமோகன், செல்லையா, சரோஜினி, தமிழ்செல்வம், மற்றும் திருச்சி தெற்கு மாவட்ட பகுதி, ஒன்றிய, நகர செயலாளர்கள், மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், மாநகராட்சி கவுன்சிலர்கள், பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் ஏ.எம்.ஜி. விஜய்குமார் வரவேற்று நன்றி கூறினார்.

### குன்னூர் ஒன்றியத்தில்

# ரூ.58 லட்சத்தில் சாலை மேம்பாட்டு பணி!

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

உதகை, ஆக. 23 - நீலகிரி மாவட்டம், குன்னூர் ஒன்றியம், கோடமலைஒசட்டி கிராம பகுதியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முதலமைச்சர் ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 58 லட்சத்தில் மேற்கொள்ளப்படும் சாலை பணியினை துவக்கி வைத்தார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் ஒன்றியம் கோடமலை ஒசட்டி கிராமப்புற சாலையானது கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைத்துக் கொடுக்கப் பட்டது. அதன் பின்னர் கடந்த 10 ஆண்டுகள் அ.தி.மு.க. ஆட்சியில் எந்த ஒரு மேம்பாடு பணிகளும் மேற்கொள்ளாமல் மக்கள் பயன்படுத்த முடியாத அளவிற்கு சாலை முற்றிலும் சேதம் அடைந்து விட்டது.

அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான இந்த சாலையை முதலமைச்சர் ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 58 லட்சத்தில் இந்த பணியை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்ததை தொடர்ந்து அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்த அமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் ஜெ. பிரேம்குமார், குன்னூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சுனிதா நேரு, பர்லியார் ஊராட்சி தலைவர் சுசிலா, துணை தலைவர் தீன தயாளன், ஒன்றிய குழு உறுப்பினர் மகாலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் கா.செல்வம், அரசு துறை அலுவலர்கள் மற்றும் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.


TAMIN தமிழ்நாடு கனிம நிறுவனம்
எண்.31, காமராஜர் சாலை, சேப்பாக்கம், சென்னை-600005.
தொலைபேசி: 044-29862018, 28511972
இ-ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம்

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | டாமின் நிறுவனத்திற்குட்பட்ட கொடைக்கல் 1193/1 (Part-15) (Ext:6.00.0 Ha) குவாரியில் உற்பத்தில் செய்யப்படும் கருப்பு கிரானைட் கற்துண்டங்கள் விற்பனை |
| 2 | ஒப்பந்தப்புள்ளி எண் / நாள்<br>ஒப்பந்தப்புள்ளி ID எண் | 1168/இஎக்ஸ்-1/2023, நாள்: 17.08.2023<br>2023_TNMIN_361647_1 |
| 3 | இ-ஒப்பந்தப்புள்ளி தளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் | 18.09.2023 பிற்பகல் 4.00 மணி வரை |
| 4 | இ-ஒப்பந்தப்புள்ளி தளத்தில் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் | 19.09.2023 பிற்பகல் 4.00 மணி |
| 5 | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை & முன்வைப்புத் தொகை | ரூ.2,000/- அல்லது USD.25 (திருப்பித் தரத் தக்கதல்ல)<br>ரூ.5,90,000/- அல்லது USD.7200 |

குறிப்பு: மேலும் விவரங்களுக்கு Tamilnadu e-tendering portal: https://tntenders.gov.in / www.tamingranites.com இணையதளத்தினை பார்வையிடவும்
செ.ம.தொ.இ./4644/ஒப்பந்தப்புள்ளி/2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்" பொது மேலாளர் (நிதி)


### தி.மு.க. மருத்துவ அணி

# மாவட்டத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம்!

### மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக மருத்துவ அணியின் மாவட்டத்தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் 26.08.2023 சனிக்கிழமை காலை 9.00 மணி அளவில் சென்னை தியாகராயர் நகரில் உள்ள 'தி அக்கார்ட் மெட்ரோபாலிடன்' விடுதியில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள், மாவட்டத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 1.நிர்வாகிகள் அறிமுகம் 2. கலைஞர் நூற்றாண்டு விழா 3.கழக ஆக்கப் பணிகள் மற்றும் அணியின் வளர்ச்சிப் பணிகள்

அண்ணா அறிவாலயம்
சென்னை 18
நாள் 21.08.2023

மருத்துவர் **நா.எழிலன்** எம்.எல்.ஏ.
செயலாளர் - தி.மு.க. மருத்துவ அணி



நீலகிரி மாவட்டம், குன்னூர் ஒன்றியம், கோடமலைஒசட்டி கிராம பகுதியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முதலமைச்சர் ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 58 லட்சத்தில் மேற்கொள்ளப்படும் சாலை பணியினை துவக்கி வைத்தார்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், நகரப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர்.எஸ்.ரகுபதி 16.08.2023 அன்று வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.எம்.மஞ்சுளா, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை... 6 ஆம் பக்கத் தொடர்ச்சி

கிண்டர்பெர்க் என்கின்ற ஒரு அமெரிக்க நிறுவனம் ஒரு ஆய்வறிக்கை வெளியிட்டாங்க. எப்படி இந்த அதானி என்ற நிறுவனம், கடந்த 9 வருடத்தில் இவ்வளவு பெரிய வளர்ச்சி அடைந்தது என்று விளக்க வேண்டும் என்று. இதுவரைக்கும் ஒருத்தர்கூட வாய் திறக்கவில்லை. அதை நம்முடைய சகோதரர் ராகுல்காந்தி அவர்கள் நாடாளுமன்றத்திலே ஆதாரத்தோடு காட்டினார்.

என்ன ஆதாரம் மோடி அவர்களும், அதானி அவர்களும் ஒரே விமானத்தில் பயணம் செய்கிறார்கள். யார் இவர் என்று நாடாளுமன்றத்தில் கேட்டார்கள். அதற்கு எந்தப் பதிலும் இல்லை.

அதற்குப் பதிலாக என்ன பண்ணினார்கள்?

ராகுல்காந்தி அவர்களுடைய பதவியைத் தகுதி நீக்கம் செய்தார்கள்.

ஆனால், ராகுல்காந்தி அவர்கள் உச்சநீதிமன்றத்தில் தடை வாங்கி விட்டார்.

நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய முதல் வெற்றி. ராகுல்காந்தி அவர்கள் நாடாளுமன்றத்தில் நுழைந்திருக்கின்றார். நான் சொன்னேன், திராவிட மாடல் அரசுக்கும், ஆரிய மாடல் அரசு சனாதான அரசுக்குமான வித்தியாசம், மணிப்பூர் பற்றி எரிகின்றது அதைப்பற்றி யாருமே வாய் திறக்கவில்லை.

நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் என்னை அழைத்து என்னிடம் சொன்னார்கள். அங்கு இருக்கக்கூடிய விளையாட்டுவீரர்கள், மணிப்பூரில் இருக்கக்கூடிய விளையாட்டு வீரர்கள்.

அவர்களெல்லாம் அங்கு பயிற்சி எடுக்க முடியாத நிலை உள்ளது. அவர்களுக்கு அழைப்பு விடுங்கள். நம் மாநிலத்துக்கு அவர்களை அழைத்து வந்து அவர்களுக்கு நம்ம மாநிலத்தில் பயிற்சி கொடுங்கள் என்று.

இப்போது 19 விளையாட்டு வீரர்கள் கடந்த ஒரு வாரமாகப் பயிற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

இதுதான் திராவிட மாடலுக்கும், ஆரிய மாடலுக்கும் உள்ள வித்தியாசம், இதை நீங்கள் உணரவேண்டும். இதையெல்லாம்விட மிக மிக முக்கியமான விஷயம், கலைஞருடைய நூற்றாண்டில் இந்த மாநாடு நடக்கப் போகிறது.

இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு. இதில் நீங்கள் கலந்துகொண்டு எப்படி இந்த உணர்வோடு இங்கு வந்திருக்கின்றீர்களோ, உணர்ச்சி பெற்றிருக்கிறீர்களோ, இதே உணர்வோடு, இதே உணர்ச்சியோடு, இதே எழுச்சியோடு நீங்கள் அத்தனைபேரும் அந்த மாநாட்டிலே கலந்துகொண்டு மிகப் பெரிய வெற்றி மாநாடாக அதை நீங்கள் மாற்றிக் காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னொரு வேண்டுகோள், சமீபத்தில் கடந்த 4, 5 நாட்களாக தமிழ் நாட்டிலே என்ன நடந்துக்கொண்டிருக்கிறது என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

பத்திரிக்கையில் படித்திருப்பீர்கள். கடந்த ஆறு ஆண்டுகளில் நீட் தேர்வுக்கு மட்டும் 21 குழந்தைகளை இழந்திருக்கின்றோம். 21 மாணவர்கள் தற்கொலை செய்திருக்கின்றனர். நீட் தேர்வில் தோல்வியடைந்து, நீட் தேர்வு எங்களுக்கு வேண்டாம் என்று தங்களின் மரணத்தால் பதிவு செய்திருக்கிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான், கிராமத்திலிருந்து ஏழை, எளிய மாணவ, மாணவிகள் மருத்துவர் ஆக வேண்டும் என்று நுழைவுத் தேர்வை ரத்து செய்தவர்.

நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா இருந்தபோது கூட தமிழ்நாட்டிற்குள் நீட் தேர்வு நுழைய முடியவில்லை.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் நீட் தேர்வு நுழைந்து விட்டது. ஆனால், தமிழ்நாட்டிற்கு மட்டும் விலக்கு வாங்கி வைத்திருந்தோம். ஆனால், அந்த அம்மாவை இழந்த பிறகு, இந்த அடிமை அ.தி.மு.க கூட்டம் நீட் தேர்வை மீண்டும் உள்ளே நுழைத்து, வருடம் இரண்டு குழந்தை, மூன்று குழந்தைகள் மரணம்.

அனிதாவில் ஆரம்பித்து, இப்போது சென்னை குரோம்பேட்டை ஜெகதீஷ் வரை தொடர்கிறது. இந்த முறை ஜெகதீஷினுடைய அப்பாவும் தற்கொலை செய்துக் கொண்டார்.

பையனுடைய மருத்துவக் கனவை நிறைவேற்ற முடியவில்லை யென்று.

இன்றைக்கு பா.ஜ.க.வினுடைய ஒரு தலைவர் பேட்டி கொடுக்கிறார். என்ன பேட்டி தெரியுமா கொடுத்திருக்கிறார்.

இந்த மாதிரி பொதுத்தேர்வில் ரிசல்ட் வந்ததுக்குப் பிறகு மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வது மிக, மிக ஒரு சாதாரணமான விஷயம். இதையெல்லாம் நாம் அப்படியே கடந்து போய்விட வேண்டுமென்று.

கொஞ்சமாகிலும் மனசாட்சி இருந்தால், இப்படியெல்லாம் யாராவது பேசுவார்களா?. அதுமட்டுமல்ல, உங்கள் வீட்டு குழந்தை இறந்தால் நீங்கள் ஒத்துக்கொள்வீர்களா?

நான் அவரைப் பார்த்துக் கேட்கிறேன் மருத்துவக் கனவு, அனிதா என்ற மாணவி 1200 மார்க்குக்கு 1172 மார்க் எடுத்தாங்க, சகோதரி அனிதா உயிரோடு இருந்திருந்தால், இன்று மருத்துவர். டாக்டர் அனிதா. அதைத் தடுத்தது யார்? இந்த ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசும், அதற்குத் துணை போன அ.தி.மு.க அரசும்தான்.

அதைக் கண்டித்து தி.மு.க. இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி மிகப்பெரிய ஒரு உண்ணாவிரத அறப்போராட்டத்தை அறிவித்தது. அந்த நீட் தேர்வு ரத்தாகும் வரை நம்முடைய சட்டப் போராட்டமும், அறவழிப்போராட்டமும் தொடரும் என்று கூறிக்கொள்கின்றேன்.

இந்த வாய்ப்பை அளித்த சுந்தர் அவர்களுக்கும், வருகை தந்த இளைஞர் அணி சகோதரர்கள் உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களையும் நன்றியையும் கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில்

# குத்தம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் நடைபெறும் பல்வேறு பணிகள்!

### அமைச்சர் - சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஆக. 23 - முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (21.08.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் குத்தம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேருந்து முனையத்தில் நடைபெற்றுவரும் பல்வேறு பணிகள் குறித்தும் மற்றும் பேருந்து முனையத்தின் இதர பணிகளான மழைநீர் வடிகால் அமைப்பு, பேருந்து முனையத்தில் முழுவதும் குளிரூட்டப்படும் (Fully Airconditioned) பணிகள் குறித்தும், சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலையிலிருந்து பேருந்து நிலையத்திற்குச் செல்லும் அணுகு சாலை அமைப்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், இப்பேருந்து முனையத்தில் மாநகரப் பேருந்துகள் நிறுத்தம், புறநகர் பேருந்துகள் நிறுத்தம், பேருந்துகளைப் பராமரிப்பதற்கான பணிமனை, தனியார் பேருந்துகள் நிறுத்தம், இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், துணைமின் நிலையம், மருத்துவ மையம், குழந்தைகளுக்கான பாலூட்டும் அறை, தானியங்கி பணப்பொறி (ATM), பொருள் பாதுகாப்பு அறை, தீயணைப்பு கட்டுப்பாட்டு அறை, காவல் நிலையம், கடைகள் மற்றும் கழிவறைகள் போன்ற வசதிகள் அமைக்கப்படுவதைக் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தினை நவீனமயமாக்கும் பணிகள் தொடர்பாக தற்போது நடைபெற்று வரும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல், வளாகத்திலுள்ள சாலைகளைச் சீரமைத்து சுத்தப்படுத்துதல், வளாகத்திற்கு வரும் மக்களின் அடிப்படைத் தேவைகளை மறுசீரமைத்தல் மற்றும் இவ்வளாகத்தில் அமையவுள்ள பூங்கா பணிகள் குறித்து விரிவாக ஆய்வு நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரையில் நடைபெற்ற அ.தி.மு.க. மாநாட்டின்போது எடப்பாடி கே.பழனிசாமி, ஆர்.பி.உதயகுமார், செல்லூர் ராஜு, ராஜன்செல்லப்பா ஆகியோர் ஏற்பாட்டின் பேரில் கலை நிகழ்ச்சி என்ற பெயரில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் மீது அவப்பெயர் ஏற்படும் வகையில் நடந்து கொண்ட அ.தி.மு.க.வினர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தலைமைச் செயற்குழு உறுப்பினரும், வழக்கறிஞருமான கே.இளமகிழன், மதுரை சரக டி.ஐ.ஜி.யிடம் புகார் மனு அளிக்க வந்த போது எடுத்தபடம். உடன் வழக்கறிஞர்கள் ராஜ்குமார், அரவிந்தன், அஸ்வா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர்,மாவட்ட கழக பொருளாளர் செ.முருகேசன், ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நினைவு 100 அடி கழக கொடி மரத்தினை பிற்படுத்தப்படடோர் நலன் மற்றும் கதர் கிராம தொழில் வாரிய அமைச்சர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன், மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையிலும், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் நம் நெஞ்சமல்லாம் நிறைந்த கழக தலைவர் தளபதியார் அவர்கள் தன் திருக்கரங்களால் ஏற்றி வைத்தார்கள்.



கோனூர் ஊராட்சியில் 41ஏக்கர் நிலப்பரப்புள்ள சங்கான்குளத்தை தனது சொந்த செலவில் தூர்வாரி கொடுக்கும் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு விவசாயிகள் பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர். சங்கான்குளத்தில் தூர்வாரும் பணியை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார். அருகில் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி உட்பட பலர் உள்ளனர்.

### கோனூர் ஊராட்சியில் 41 ஏக்கர் நிலத்தினை தனது சொந்த செலவில் தூர் வார நடவடிக்கை

# சங்கான்குளத்தில் தூர்வாரும்பணி!

## அமைச்சர் ஐ. பெரியசாமி ஆய்வு!

ஆத்தூர், ஆக.23-

கோனூர் ஊராட்சியில் 41ஏக்கர் நிலப்பரப்புள்ள சங்கான்குளத்தை தனது சொந்த செலவில் தூர்வாரி கொடுக்கும் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு விவசாயிகள் பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர். சங்கான்குளத்தில் தூர்வாரும் பணியை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கோனூர் ஊராட்சியில் சங்கான்குளம் உள்ளது 41ஏக்கர் (16.43ஹெக்டேர்) நிலப்பரப்புள்ள இந்த குளத்தை தூர்வாரி கொடுக்கவேண்டுமென்று ஊராட்சிமன்ற தலைவர் வெள்ளதாய் தங்கபாண்டியன் தலைமையில் விவசாயிகள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்தனர். கோரிக்கை மனுக்களை பெற்ற உடனே தனது சொந்த செலவில் சங்கான்குளத்தை தூர்வாரி கொடுப்பதாக உறுதியளித்தார். அதன்படி சங்கான் குளத்தில் தூர்வாரும் பணி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவருமான ப.க.சிவகுருசாமி தலைமை தாங்கினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் தங்கபாண்டியன், ஒன்றிய குழு உறுப்பினர் திருப்பதி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சிமன்ற தலைவர் வெள்ளைத்தாய் தங்கபாண்டியன் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் தூர்வாரும் பணிக்கான பூமி பூஜையில் கலந்துகொண்டு தூர்வாரும் பணியை துவக்கி வைத்தார். அப்போது விவசாயிகள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி தூர்வாரும் போது எடுக்கப்படும் வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவேண்டுமென்றும் எக்காரணம் கொண்டும் விற்பனைக்கு கொண்டுசெல்ல கூடாது என உத்தரவிட்டதோடு சங்கான்குளத்தை சிறப்பாக தூர்வாருவதோடு கரைகளை நன்றாக பலப்படுத்த வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்த குளம் தூர்வாருவதால் கோனூர், கரிசல்பட்டி ஊராட்சி, கசவனம்பட்டி, தருமத்துப்பட்டி பகுதி விவசாயிகள் பயன்பெறுவருவார்கள் என்றார். தங்களின் கோரிக்கையை ஏற்று உடனே சங்கான்குளத்தை தூர்வார நடவடிக்கை எடுத்ததற்கு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருக்கு கோனூர்வட்டார விவசாயிகள் மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் கன்னிவாடி பேரூர்கழக முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் சண்முகம், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், ரெட்டியார் சத்திரம் ஒன்றிய உதவி பொறியாளர் மகேந்திரன், ராஜேஸ்கண்ணா, ஊராட்சிமன்ற தலைவர்கள் கசவனம்பட்டி சக்தி, கரிசல் பட்டி பால்ராஜ், ஒன்றியகுழு உறுப்பினர்கள் ஜஸ்டின் மிக்கேல் அம்மாள், நாகலெட்சுமி ரமேஷ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் சுப்பு லெட்சுமி வள்ளுவன், வருவாய் ஆய்வாளர் ரித்திகா, கிராம நிர்வாக அலுவலர் சந்திரசேகர், ஆயகட்டு தலைவர்கள், வெல்லம் பட்டி ஊர் கவுன்டார், வார்டு உறுப்பினர் வெல்லம்பட்டி மணி, டாஸ்மாக் வடிவேல், கரிசல்பட்டி ஜோசப் ஆசான், ஆவாரம் பட்டி தாஸ், மற்றும் கோனூர் ஊராட்சியை சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர். நிறைவாக ஊராட்சி செயலாளர் காளிமுத்து நன்றிகூறினார்.

# தலைமைச்செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன் மகள் திருமணம்!

## அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு !

திருவெறும்பூர், ஆக.23-

திருவெறும்பூர் தொகுதி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என். சேகரன் சித்ரா. இவர்களது மகளும், திருவெறும்பூர் பகுதி செயலாளரும், திருச்சி மாநகராட்சி 40 வது வார்டு கவுன்சிலருமான சிவக்குமாரின் சகோதரியுமான இன்ஜினியர் நந்தினிக்கும், திருச்சி மாவட்ட ஊராட்சிகள்குழு துணைச் சேர்மன் கருணாநிதியின் சகோதரி கல்யாண சுந்தரி தெய்வத்திரு. சுந்தர ராஜனின் மகன் இன்ஜினியர் பால ஆனந்துக்கும் திருமணம் நடந்தது. இதனைத் தொடர்ந்து திருமண வரவேற்பு விழாவைத் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை வகித்து வாழ்த்திப் பேசியதாவது.

திருவெறும்பூர் தொகுதியில் அரசு நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்த்ததில் திருவெறும்பூர் முன்னாள் எம்எல்ஏவான சேகரன் சிறப்பாக செயல் பட்டவர். நீண்டகாலமாக பட்டா பெற முடியாமலிருந்த நவல்பட்டு அண்ணாநகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்புவாசிகளுக்குப் பட்டா பெற்றுத் தந்தவர். திருவெறும்பூரில் காவேரி குடிநீர் திட்டத்தைப் பெற்று தந்தவர். எனது கோரிக்கையை ஏற்று திருவெறும்பூர் தொகுதியில் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெற்றிக்காக பாடுபட்டதோடு, தன்னைவிட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தவர். 2016 ல் திருவெறும்பூர் தொகுதியில் மட்டும் தான் நான் பிரச்சாரத்திற்கு வந்தேன். திருவெறும்பூர் தொகுதி எம்எல்ஏவாக அன்பில் மகேஷ் பொய்யாமொழி தேர்ந்தெடுக்கப்பட்டதிற்கும் தற்போது அமைச்சரானதிற்கும் முக்கிய பங்கு மக்களின் பேரன்பைச் சேகரித்துள்ள சேகரனுக்கு உண்டு" என்றார்.

முன்னதாக, தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்ட செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, வரவேற்புரையாற்றினார். தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என். சேகரன் பேசியதாவது., “இத்தருணம் என் வாழ்நாளில் மறக்க முடியாதது. இதற்காக தனது பரம்பரையே ஒட்டுமொத்தமாக திமுகவின் வெற்றிக்குப் பாடுபடும்” என்று நெகிழ்ச்சியுடன் பேசினார். கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமாயன கே.என். நேரு முன்னிலை வகித்தார். உள்ளாட்சித்துறை அமைச்சர் ஐ . பெரியசாமி வாழ்த்துரை வழங்கினார். விழாவில், அமைச்சர்கள் வெள்ளக்கோவில் சாமிநாதன், மதுரை மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசர், மாநகர கழக செயலாளர் மதிவாணன், சட்ட மன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், அப்துல் சமது, தியாகராஜன், ஸ்டாலின் குமார், பழனியாண்டி, கதிரவன், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, துவாக்குடி நகராட்சி சேர்மன் காயாம்பு, உட்பட திரளானோர் கலந்து கொண்டனர்.

திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கருணாநிதி, கூத்தைப்பார் பேரூராட்சி தலைவர் செல்வராஜ், கூத்தைப்பார் பேரூர் செயலாளர் தங்கவேல் நன்றி கூறினர்.



தேனி மாவட்டம் கானா விளக்கு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட ஒருங்கிணைந்த ஆயுஸ் மருத்துவமனை காணொளி காட்சி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மகாராஜன் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் மாநில நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ராமசாமி ஆண்டிபட்டி பேரூராட்சி தலைவர் பொன் சந்திரகலா துணைத்தலைவர் ஜோதிசேகர் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நீட்: நீதியைக் கேலிக் கூத்தாக்கி - கூட்டாட்சி முறையை அவமதிப்பதா?

இந்தியாவில் நீட் தேர்வு நடைமுறைப்படுத்தப்பட்ட காலம் முதல் தற்போது வரை தமிழகத்திலும் பிற இடங்களிலும் அதனால் நிகழும் தற்கொலைகளும்தொடர்கதை யாகிவிட்டது. நீட் தேர்வில் இரு முறை தோல்வியுற்ற விரக்தியில் சமீபத்தில் உயிரை மாய்த்துக்கொண்ட சென்னையை சேர்ந்த 19 வயது மாணவனையும் சேர்த்து, NEET தேர்வினால் தற்கொலை செய்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது.

இந்த ஆண்டுக்கான நீட் தேர்வு முடிவுகள் ஜூன் 1 ஆம் தேதி வெளியான நிலையில், நீட் வரலாற்றில் முதல் முறையாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபஞ்சன் எனும் மாணவன் 720/720 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்தில் முதலிடம் பிடித்தார்.

மேலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் அகில இந்திய அளவில் முதல் 10 இடங்களில் இடம்பெற்று சாதனை படைத்தனர். இந்த மாணவர்களின் சாதனை பாராட்டுக்குரியதே ஆயினும், இவர்களின் வெற்றியை வைத்து நீட்தேர்வினை நியாயப்படுத்த முடியாது.

தி.மு.க. அரசும் பிற அரசியல் கட்சிகளும் நீட் தேர்வை எதிர்ப்பதற்கு காரணம் நம் மாணவர்களுக்கு அந்த தேர்வை எதிர்கொள்ளும் திறன் இல்லாததால் அல்ல.. நீட்போன்ற நுழைவுத் தேர்வுகள் சமுதாயத்தில் பின்தங்கிய குடும்பங்களில் இருந்து வரும் மாணவர்களை ஓரம் கட்டிவிடுவதால் தான். உதாரணத்திற்கு, தமிழ்நாட்டில் புகழ்பெற்ற கல்லூரிகளில் ஒன்றான ஐ.ஐ.டி.யில் சேரும் மாணவர்களில் 80 சதவீதத்தினர் சென்னையை சேர்ந்தவர்களாகவும், குறிப்பாக குறிப்பிட்ட பள்ளியை சேர்ந்த மாணவர்களாகவும் இருக்கின்றனர். அதேபோல பிராந்திய பொறியியல் கல்லூரிகள் தேசிய கல்லூரிகளாக மாற்றப்பட்டு 12 ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் இல்லாமல் நுழைவுத்தேர்வு அடிப்படையில் மாணவச் சேர்க்கை நடத்தப்பட்டு வருகிறது. இதனால் திருச்சியில் உள்ள NITஇல் சேரும் கிராமப்புற மாணவர்களின் எண்ணிக்கை 4 மடங்கு குறைந்தும் சென்னையை சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்தும்உள்ளது. இது தமிழ்நாட்டில் சென்னை மாணவர்கள் மட்டும் தான் திறமையானவர்களா; பிற மாணவர்கள் திறமையற்றவர்களா என்ற கேள்வியை எழுப்புகின்றது. ஆனால் அப்படி இல்லை..

‘தகுதி’ என்ற பதத்தைப் பற்றிய சரியான புரிதல் இல்லாததிலிருந்து விளைந்த குறுகிய பார்வை மற்றும் கருத்துகள் இவை. தகுதி என்பது ஒரு கருத்தாக்கம்; அதை மோசடி என்றுகூட கூறலாம். பல தளங்களில் ‘தகுதி’ என்பது போட்டித் தேர்வுகளில் ஒருவரது செயல்பாடு என்ற வெகுளித்தனமான கண்ணோட்டம் நிலவுகிறது. இந்த கண்ணோட்டம், சாதிய பாகுபாடுகள், பெற்றோரின் வெளிப்பாடு [EXPOSURE], படித்த பள்ளிகள், வாழும் சூழல் மற்றும் குழந்தைப் பருவ புறக்கணிப்பு மற்றும் முறைகேடு போன்ற இதர எதிர்மறை தாக்கங்கள் குறித்து மௌனமாக இருக்கிறது. கிராமத்தில், தலித்குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தைக்கு, தில்லியில் மேல் நடுத்தர வர்க்கக்குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தையை விட 10 மடங்கு குறைந்த வாய்ப்பும் வளங்களுமே இருக்கும். பின்னது தில்லியின் சிறந்த பள்ளிகளுள் ஒன்றில்சேர்ந்து, அதன் பெற்றோர் அதற்கான எதிர்காலப் பாதையை ஏற்கனவே தேர்ந்தெடுத்து முன்கூட்டியே தயாராகும் ஆதாயத்தைப் பெற்றுவிட, முன்னது பெரும்பாலும் சுமாரான அடிப் படை வசதிகள் கொண்ட பள்ளியில், பகுதி நேரம் பெற்றோருடன் வேலை பார்த்தபடியேசேர்ந்திருக்கும். இவ்வாறான நிலையில் தகுதியையோ திறமையையோ எவ்வாறு அளவீடு செய்ய முடியும்? இவ்விரு குழந்தைகளையும் ஒரே தேர்வை எழுத வைத்து, அதில் வாங்கும் மதிப்பெண் கள்அடிப்படையில் அவர்களது விண்ணப்பம் குறித்து முடிவு செய்வதென்பது பெரும் அநீதி அல்லவா? கோடிக்கணக்கான குழந்தை கள் மற்றும் பதின்பருவத்தினரின் எதிர்காலத்தை நீட் போன்ற - பயிற்சி பெறக்கூடிய, ஒரு ஒற்றைப் போட்டித்தேர்வுடன் இணைப்பது நியாயமற்றதாகும். இது, நிலவும் பிளவுகளை மேலும்விரிவுபடுத்தி, சமமின்மையை நிலைக்கச்செய்யும். தூய தகுதி எனும் கட்டுக்கதை அனைத்து தேர்வு அளவுகோல்களிலும் எதேனும் முரண்பாடு இருக்கும். கற்பனாவாதக் கருத்து. என்றாலும், கொள்கை இயற்றுபவர்கள் இதுபோன்ற முரண்பாடுகளையும் உள்ளார்த்த சார்புகளையும் முடிந்த அளவு குறைக்கும் வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டும். இதைத்தான், மருத்துவக் கல்விக்கான நுழைவுத்தேர்வுகளை அழித்து, தமிழ் நாட்டு மாணவர்களுக்கான ஒரு பொது, தளர்த்தப்பட்ட பாடத் திட்டமான சமச்சீர் கல்வியை அறிமுகப்படுத்தி, கலைஞரின் தலைமையிலான தி.மு.க. அரசு செய்தது. எளிய பாடத்திட்டம் ஆடுகளத்தினை ஓரளவு சமன்படுத்த உதவுகிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நீட் குறித்து சில ஆய்வுகளே மேற்கொள்ளப் பட்டிருந்தாலும், உலகமெங்கிலும், தகுதி எனும் கொள்கைக்கு நுழைவுத் தேர்வுகள் எதிரானவை என்பது குறித்து பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏ.கே.ராஜன் குழுவறிக்கை யின்படி, 2010இல் ஆங்கில வழிக் கல்வி பயின்ற 80.2 விழுக்காடு மாணவர்களும், தமிழ்வழிக் கல்வி பயின்ற 19.79 விழுக்காடு மாணவர்களும் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், நீட் அறிமுகப்படுத்திய பின், 2017இல் அனுமதி பெற்ற 98.41 விழுக்காடு பேர் ஆங்கிலவழி கல்வி பயின்றவர்கள். தமிழ் வழிக் கல்வி பயின்ற மாணவர்களில் 1.6 விழுக்காடு மட்டுமே கல்லூரி யில் இடம் பிடித்தனர். எடுத்துக்காட்டாக, நீட்டிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தரவுகள் இத்தேர்வு முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கு இல்லாமல் முதல் தலைமுறை யல்லாத பட்டதாரிகளுக்கு பெருமளவு சாதகமாக அமைந்துள்ளதைக் காண்பிக்கின்றனர்.

2010-2011இல், மருத்துவக் கல்லூரியில் இடம் பிடித்த முதல் தலைமுறை போட்டியாளர்களின் விழுக்காடு 24.61 விழுக்காடாக இருந்தது (முதல் தலைமுறையல்லாத போட்டியாளர்களின் விழுக்காடு 75 விழுக்காடாக இருந்தது). 2017ல், நீட்டிற்குப் பிறகு, இந்த விழுக்காடு வேகமாக சரிந்து, முதல் தலைமுறை மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் இடம் பிடிப்பது 14.46 விழுக்காடாகி, மீதி பெரும்பாகமான 85.54 விழுக்காடு இடங்கள் முதல் தலைமுறை யல்லாத மாணவர்க ளுக்கு விடப்பட்டது. அதேபோல், நீட் தேர்வில் தேர்ச்சி பெறும் பெரும்பாலான மாணவர்கள் சிபிஎஸ்இ பின்புலத்திலிருந்து வருவதாகவே தெரிகிறது பெரும்பாலான சி.பி.எஸ்.இ. பள்ளிகள் அதிக கட்டண முடையவையாக உள்ளன. அதே நேரம், சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் படிப்பதை நிர்பந்திப்பது, நமது குழந்தைகள், ஆளும் பா.ஜ.க. அரசு தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு (NCERT) பாடத்திட்டத்தில் திணித்துவரும் பிரச்சாரத்தை, கற்றுக்கொள்ள வழி செய்யும்.

தி வாஷிங்டன் டைம்ஸ் மற்றும் புளூம்பெர்க் நடத்திய ஒரு ஆய்வு, பெரும்பணக்காரக் குடும்பத்திலிருந்து (உச்சி 1 விழுக்காடு) வரும் ஒருவர் ஐவி லீக் பள்ளியில் படிப்பதற்கான வாய்ப்பு, வறிய குடும்பத்திலிருந்து (கீழ் 20 விழுக்காடு) வரும் ஒருவரை விட 77 மடங்கு அதிகம் என்று காட்டுகிறது.

வசதி படைத்த பின்புலத்திலிருந்து வருபவர்களால், வருடத்திற்கு 1 இலட்சம் வரை கட்டணம் வசூ லிக்கும் தனியார் சிறப்பு பயிற்சி பெற முடியும். 2005இல் நடந்த ஒரு ஐ.ஐ.டி. ஆய்வு, ஐஐடிக்கு தேர்ச்சி பெற்றதில் 95 விழுக்காடு மாணவர்கள் தனியார் பயிற்சி வகுப்புகளுக்குச் சென்றதாகவும், அதில் 75 விழுக்காடு நகர்ப்புற பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தது. அதிர்ச்சியூட்டும் விதமாக, பத்தாண்டுகளுக்கு முன்பு வரை ஐ.ஐ.டி. சென்றவர்களில் ஆறில் ஒருவர் (1/6) கோட்டாவிலுள்ள பன்சால் வகுப்புகள் எனும் ஒரு பயிற்சி நிறுவனத்திலிருந்து வந்தவர்கள். இத்தகைய நிறுவனங்கள் சில, வருடத்திற்கு 1 இலட்சத்திலிருந்து 2 இலட்சம் வரை வசூலிக்கின்றன. இது பெரும்பான்மை இந்தியர்களால் செலுத்தவியலாத ஒரு தொகை. எனவே தான், ஐ.ஐ.டி.யில் அனுமதிக்கப்படுபவர்களில் வெறும் 2.86 விழுக்காடு மாணவர்களே நலிந்த/கிராமப்புற, படிக்காத குடும்பத்திலிருந்து வருப வர்கள். அகில இந்திய பொறியியல் நுழைவுத் தேர்வில் (AIEEE) வெற்றி பெற்றவரான ஆசிரியர், 2000ங்களின் நடுவில், நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் சேர்ந்த மாணவர்களில் 70 விழுக்காடு சென்னையைச் சேர்ந்தவர்கள், அதிலும் குறிப்பான சில பள்ளிகளிலிருந்து வந்தவர்கள் என்று கூறுகிறார்.

தமிழ்நாட்டின் கிராமப்புறத்தில், மிகவும் வறிய தலித் குடும்பத்தில் பிறந்த அனிதா, சிறுவயதிலேயே தனது தாயை இழந்து விட்டார்; அவரது தந்தை ஒரு கூலித் தொழிலாளி. இத்துனை உள்ளார்ந்த சார்புகளை யும் மீறி, பள்ளித் தேர்வுகளில் 1200க்கு 1176 எடுத்து முதல் 0.3 சதவீதத்தில் தேர்ச்சி பெற அனிதாவினால் முடிந்தது. நீட் இல்லாது போயிருந்தால், அவரது பள்ளி மதிப்பெண்கள் கொண்டே, தமிழ்நாட்டின் தலை சிறந்த மருத்துவக் கல்லூரியொன்றில் படித்து, தனது சமூகத்தில் முதல் மருத்துவராக வந்திருப்பார். நீட் தேர்வில் தேர்ச்சி பெறாமல் அனிதாவை தடுத்தது அவரது திறனின்மையா அல்லது வாய்ப்புகள், வளங்கள் மற்றும் நேரப் பற்றாக்குறையா? கண்டிப்பாக அது நேர, வள மற்றும் வாய்ப்புகள் பற்றாக்குறையே. தனது கனவை நோக்கி முன்னேறும் வாய்ப்பை அவருக்கு அளித்திருந்தால், பயிற்சி நிலையத்தின் உதவி கொண்டு நீட் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றவரை விட சிறப்பாக செயலாற்றும் நிலையில் அனிதா இருந்திருப்பார்.


**சேலம் தரணிதரன்**
கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர்




ஆனால், நீட் தேர்வு கொண்டு நாம் அனிதாவிற்கு மட்டுமல்லாது ஒரு முழு சமுதாயத்தின் இலட்சியத்திற்கே துரோகம் இழைத்திருக்கிறோம். நீட்தொடர்பான தற்கொலைகள், பதற்றம் காரணமானவையன்று; அவை இலட்சியம் மற்றும் நம்பிக்கை பறிக்கப்படுவதன் விளைவாக நிகழ்பவை. இதனாலேயே, பெரும்பாலான நீட் இறப்புகள் கிராமப்புற மற்றும் விளிம்புநிலை பின்புலம் கொண்டவர்களி டையே நிகழ்கின்றன. நீட் தேர்வின் தொடர்ச்சி தமிழ்நாட்டில் வழக்க மாக உருவாவதை விட நகர்ப்புறத்திலிருந்து அளவிற் கதிகமான மருத்துவர்களை உருவாக்கி, கிராமப் புறத்தில் மருத்துவர்களுக்கான பற்றாக்குறைக்கு இட்டுச் செல்லும், மேலும், நீட் ஆயிரக்கணக்கான கிராமப்புற, விளிம்புநிலை மாணவர்களின் கனவுகளையும் சிதைக்கும்.

தமிழ்நாடு இந்திய மாநிலங்களின் சுகாதார விளைவுகளின் தரவரிசையில், தொடர்ந்து முதல் 3 இடங்களில் இருந்து வருகிறது. தமிழ் நாடு, மக்கள் தொகைக்கு அதிகமான மருத்துவர்கள் இருக்கும் மாநிலமாக மட்டுமல்லாமல்,மருத்துவர்களின் சிறந்த இடஞ்சார்ந்த நியமனப் பகிர்வு [SPATIAL DISTRIBUTION] உடைய மாநிலமாகவும் உள்ளது. இவை நுழைவுத் தேர்வுகள் ரத்து செய்தல், சாதி அடிப்படை/இட ஒதுக்கீடு (கிராமப்புற/அரசுப் பள்ளி மாணவர்க ளுக்கான இட ஒதுக்கீடு) மற்றும் தமிழ்நாட்டில் பல இடங்களில் மருத்துவப் பல்கலைக்கழகங்கள் தொ டங்குவது போன்ற தலையீடுகளினால் சாதித்தவை. அதுவும், தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை, இந்தியாவின் மருத்துவச்சுற்றுலா மையமாக விளங்குகிறது. இது போன்று சுகாதாரத் துறையில் பொறாமைப்படக் கூடிய அளவிற்கான முன்னேற்றத்தைக் கண்டுள்ள மாநிலம், ஒன்றிய அரசினால் அதன் வெற்றி கரமான முன்னேற்ற மாதிரியிலிருந்து விலகுமாறு நிர்பந்திக்கப்படவேண்டும்?

மாறாக, தமிழ்நாடு இந்தியாவிற்கான முன்மாதிரி யாக ஆக்கப்பட்டு, ஒன்றிய அரசு தமிழ்நாடு மாதிரியை பிற மாநிலங்கள் பின்பற்றுமாறு பரிந்துரைக்க வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகள் போன்ற பன்முகத் தன்மை கொண்டநாடு இந்தியா; மாநிலங்களுக்கிடையிலான முன்னேற்ற நிலைகளில்பெரும் வேறுபாடு உள்ளது. உதாரணமாக, தமிழ்நாட்டில், ஜார்க்கண்டை விட 32 மடங்கு மக்கள் தொகைக்கு அதிக மருத்துவர்கள் இருக்கிறார்கள். மாநிலங்களிடையே இத்தகைய வேறு பாடுகள் நிலவும்போது, ஒன்றிய அரசு இத்தகைய பன்முகத்தன்மைவாய்ந்த நாட்டிற்கு எவ்வாறு ஒரே சேர்க்கை

வழிமுறையை உருவாக்க முயற்சிக்க முடியும்? பொதுச் சுகாதாரம் மாநிலப் பட்டியலிலும், கல்வி ஒருங்கியல் பட்டியலிலும் இருக்கும் நிலையில், தமிழ் நாடு அரசு சட்டசபையில் இயற்றிய சட்டத்தினை குடியர சுத் தலைவர் பாராட்டி அதற்கு தனது ஒப்புதலையும் தருவதே நியாயம். தமிழ்நாட்டில் நீட் தேர்வு இனியும் தொடர்வது, நீதியைக் கேலிக்கூத்தாக்கி, கூட்டாட்சி முறையை அவமதிப்பதாகும்.

கலைஞர் நூற்றாண்டு சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம்

# தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் திறப்பு விழா

நாள் : 23.08.2023 – புதன்கிழமை
இடம் : வாழப்பாடி.




மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர்

## கழக தலைவர் அவர்கள்

கழக பொதுச்செயலாளர் மாண்புமிகு. **துரைமுருகன்** அவர்கள்

கழக இளைஞர் அணி செயலாளர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்

**கழக பொருளாளர்** அவர்கள் மற்றும் **துணை பொதுச் செயலாளர்கள்**

ஆகியோரின் நல்வாழ்த்துகளோடு

திறந்து வைப்பதற்கு வருகைத் தரும்

கழக முதன்மை செயலாளர்
மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் **கே.என்.நேரு** அவர்களையும்

திறப்புவிழாவிற்கு தலைமையேற்கும்
சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் **எஸ்.ஆர்.சிவலிங்கம்** அவர்களையும்

**மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் அனைவரையும் வருக! வருக! என அன்புடன் வரவேற்கும் ...**




... அன்புடன் ...

திருமதி. **S.வெண்ணிலாசேகர்**
வீரபாண்டி ஒன்றிய கமக செயலாளர்

**வீரபாண்டி, சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க**





திருச்சி – மெயின் கார்டு பகுதியில் உள்ள 'ஹோலி கிராஸ் கல்லூரி'– 100 வது ஆண்டைக் கொண்டாடும் விதமாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தபட்டன. இதில் பலவிதமான விளையாட்டுப் போட்டிகளில் மாணவிகள் மிகுந்த உற்சாகமாக கலந்து கொண்டனர். நேற்று முன்தினம் மாலை 100 வது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்விதுறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் இனிகோ இருதயராஜ், திருச்சி மேயர் அன்பழகன், மாநகர காவல்துறை ஆணையர் காமினி மற்றும் கல்லூரி முதல்வர் இஸபெல்லா ராஜகுமாரி மற்றும் ஆசியர்கள், மாணவிகள் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

# குறிஞ்சிப்பாடி தொகுதியில் - முடிவுற்ற பல்வேறு திட்டப் பணிகள்!

## வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

குறிஞ்சிப்பாடி, ஆக.23-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை நேற்று மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். அ. அருண் தம்புராஜ் முன்னிலையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தொடக்கி வைத்தார்.

அதன் விபரம் வருமாறு:

கடலூர் வட்டத்திற்குட்பட்ட பச்சையாங்குப்பம் ஊராட்சி சொத்திக்குப்பம் கிராமத்தில் குறிஞ்சிப்பாடி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடை, சேடப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கீழ் குடிகாடு பகுதியில் புதிய பகுதி நேர நியாயவிலைக்கடை, சேடப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் காரைக்காடு பகுதியில் குறிஞ்சிப்பாடி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை மற்றும் சேடப்பாளையம் ஊராட்சி பெரியகாரைக்காடு கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி நிதியின் கீழ் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்டப்பட்டவுள்ளதையும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

வழிசோதனைப்பாளையம்தொடக்கவேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கீழ் அன்னவல்லி கிராமத்தில் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில்; புதிய நியாய விலைக்கடை, சேடப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் ஆண்டிக்குப்பம் பகுதியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை, வழிசோதனைப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் ராமாபுரம் ஊராட்சியில் உள்ள புதுக்குப்பம் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை மற்றும் ராமாபுரம் ஊராட்சியில் உள்ள சாத்தங்குப்பம் கிராமத்தில்குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடை ஆகியவற்றை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து புதுக்குப்பம் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கடலூர் ராமாபுரம் (வழி கண்ணாரப்பேட்டை, வழிசோதனைப்பாளையம்) வரை இயங்கி வந்த அரசு பேருந்து சேவையை, புதுக்குப்பம் வரை நீட்டிக்கப்பட்ட வழித்தடத்திலான பேருந்து சேவையை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடக்கி வைத்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் பல்வேறு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் 14 மகளிர் சுய உதவிக் குழுக்களில் மொத்தம் 176 நபர்களுக்கு ரூபாய் 91 லட்சத்து 24 ஆயிரம் மதிப்பீட்டில் கடன் உதவிக்கான காசோலைகளை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜராம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட இயக்குநர் லி.மதுபாலன், கூட்டுறவு இணை பதிவாளர் நந்தகுமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 'வைட்டல் பே' தனிப்பிரிவு! ரூ.60 லட்சம் மதிப்பில்

# அணைக்கட்டு - பொய்கை ஆரம்ப சுகாதார நிலையத்தில் புற நோயாளிகள் பிரிவு!

## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

வேலூர், ஆக. 23 -

பொதுசுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறையின் சார்பில் வேலூர் மாவட்டம் அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம் பொய்கை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 60 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய புற நோயாளிகள் பிரிவினை பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைக்கும் விதமாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் புதிய கட்டடத்திற்கான கல்வெட்டினை நேற்று முன்தினம் (21.8.2023) திறந்து வைத்தார்.

அதன் விபரம் வருமாறு:

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் வேலூர் மாவட்டம் பொய்கை ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவு கட்டடம் கட்டும் பணி ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் பரப்பளவு 169 ச.மீ (அ) 1818 ச.மீ ஆகும். தரைதளத்தில் ஆண்கள் புற நோயாளிகள் பிரிவு, பெண்கள் புறநோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, என்சிடி அறை, மருந்தகம், கழிவறை ஆகியவை இக்கட்டிடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளாகும்.

இதனைத் தொடர்ந்து, வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் அதி நவீன செயற்கை கால்களை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 2 பயனாளிகளுக்கு வழங்கினார்.

இத்திட்டத்தில் பயனடைந்த பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் மா. சுப்பிரமணியனுக்கும் நன்றிகளை தெரிவித்தனர்.

வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதுவரை 7 நபர்களுக்கு ரூபாய் 16.5 லட்சம் மதிப்பில் நவீன செயற்கை கால்கள் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. செயற்கை கால்கள் தயாரிக்க குறைந்தது தோராயமாக ரூ.75,000 முதல் ரூ.5,00,000 இலட்சம் வரை செலவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் புற நோயாளிகள் பிரிவில் நுழைவு வாயிலில் 'வைட்டல் பே' அதாவது முக்கிய ஆரம்ப மதிப்பீட்டு பகுதி தொடங்கப்படும் என 202324 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக இன்று வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள வைட்டல் பே தனிபிரிவை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள 36 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனைகளில் வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவில் வைட்டல் பே என்னும் தனிபிரிவு முதன்முதலில் தொடங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



கடலூர் மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அன்னவல்லி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவிக்கான காசோலைகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர் லி.மதுபாலன் ஆகியோர் உள்ளனர்.



காஞ்சிபுரம் மாநகரத்தில் – அமைச்சர் தா.மோ. அன்பரசனின் உதவியாளர் – முரசொலி மூத்த நிருபர் காஞ்சி கே.சம்பத் மகன் கே.எஸ். செந்தில் முருகேசன் – ஆர்.பூங்கோதை மணவிழாவில் – முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.



கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் காலை, சென்னை – அண்ணாநகர் – டி.கே.மகாலில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தனிப்பணியாளராக இருந்த (நினைவில் வாழும்) கரு. செயல்மணி அவர்களின் பேத்தி டாக்டர் கண்மணி கோவலன் –கே.வருண்குமார் ஆகியோரது திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., திருப்பத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராம.அருணகிரி, பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் உள்பட கழக முன்னணியினர் பலரும் மணவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்தினார்கள்.

## அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியர் பேச்சுப் போட்டி - பரிசளிப்பு விழா! இன்று

# மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – விழாத் தலைமையேற்று பரிசுகள் வழங்குகிறார்!

## உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள் பங்கேற்பு! பீட்டர் அல்போன்ஸ் வரவேற்புரை!

சென்னை, ஆக. 23-

தமிழ்நாடு அரசு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி 2023-ன் பரிசளிப்பு விழா இன்று (23.8.2023 - புதன் கிழமை) காலை 10.30 மணி அளவில் சென்னை - கோயம்பேடு தூய தாமஸ் கல்லூரி அரங்கில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் - தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ் வரவேற்புரையாற்றுகிறார்.

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.செஞ்சி மஸ்தான் வாழ்த்துரை வழங்குகிறார்.

இவ்விழாவிற்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று, வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார். மாநில ஒருங்கிணைப்பாளர்கள் பேராசிரியர் - முனைவர் ஜே.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், முன்னாள் எம்.பி., வெ.அழகிரிசாமி, பேராசிரியர் முனைவர் ஜெ.ஹாஜா கனி, எஸ்.டி. நெடுஞ்செழியன் ஆகியோர் கௌரவிக்கப்படுகின்றனர்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் நன்றி கூறுகிறார்.

"தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 'தலைநிமிரும் தமிழகம்' என்ற தமிழகத்தின் விடியலுக்கான முழக்கத்தை தமிழகக் கல்லூரி மாணவர்களிடம் கொண்டு சேர்க்க தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் தமிழகத்திலுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்துக் கல்லூரிகளின் மாணவர்களுக்காக தமிழிலும், ஆங்கிலத்திலும் பேச்சுப் போட்டிகளை நடத்தி முடித்துள்ளது.

கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடத்திட்டங்களுக்கு அப்பால், மாணவர்கள் அறிந்தும் உணர்ந்தும் தெளிய வேண்டிய உன்னத விழுமியங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கவும், தமிழ்ச் சமூகத்தின் தனித்துவமான பண்பாடுகளை, பெருமைகளை, இலக்கியங்களை, கலைகளை, வரலாற்றை மாணவர்கள் அறிந்து கொள்ளும் விதமாக தமிழகத்தின் 38 மாவட்டங்களில் நடத்தப்பட்ட இப்போட்டிகளில் 4,000 மாணவ மற்றும் மாணவியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தமிழுக்கும், ஆங்கிலத்துக்கும் தனித்தனியாக மூன்று பரிசுகளும் (ரூ.20,000, ரூ.10,000, ரூ.5,000) மாநில அளவில் நடந்த போட்டிகளில் தமிழுக்கும், ஆங்கிலத்திற்கும் தனித்தனியாக மூன்று பரிசுகளும் (ரூ.1,00,000, ரூ.50,000, ரூ.25,000) சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் 228 மாணவ மற்றும் மாணவியர்களும், மாநில அளவில் 6 மாணவ மற்றும் மாணவியர்களும் பரிசுகளைப் பெறுகிறார்கள்.

சமூகநீதி, மத நல்லிணக்கம், மனிதநேயம், சுயமரியாதை அனைவருக்குமான வளர்ச்சி என்று தன் வாழ்நாள் முழுவதும் அதற்காகவே வாழ்ந்த தலைவர் கலைஞர் அவர்களின் அடியொற்றி தடம் பிறழாமல் பயணிக்கும் தமிழக முதலமைச்சரின் பொற்கரங்களால் இம்மாணவர்கள் பரிசுகள் பெறுவது மிகப்பெரும் பேறு.

இப்போட்டிகளை நடத்துவதற்கான அனுமதியினையும், வழிகாட்டுதல்களையும் அளித்து பரிசுகள் வழங்கி மாணவச் செல்வங்களை பெருமைப்படுத்தவிருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றி!" என தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்துள்ளார்.



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், பொய்கை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ. 60 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புற நோயாளிகள் பிரிவை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (21.08.2023) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், ப.கார்த்திகேயன், திருமதி அமுலு விஜயன், மாவட்ட திட்டக் குழுத் தலைவர் மு.பாபு. மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில் குமார், வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பாப்பாத்தி துணை இயக்குனர் (மருத்துவ பணிகள்) மரு. பானுமதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திராவிடப் போராளிகள் 31

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## ‘சீர்திருத்தச் செல்வி’ விசாலாட்சி அம்மையார்




விசாலாட்சி அம்மையார் பிறந்த ஊர் ஆராவயல், சண்முகநாதபுரம். அவரது தந்தையார் பெயர் சாமிநாதன். அம்மையாருக்கும் காரைக்குடி இராம சுப்பையாவுக்கும் திருமணம் நடந்தது 1928-ஆம் ஆண்டு. அப்போது விசாலாட்சியின் வயது 13.

அவர்களது மூத்தமகன் லெனின், மகள் இந்திராணி இருவரும் இளம்வயதிலேயே இறந்துவிட்டனர். அடுத்துப் பிறந்த பிள்ளைகளான எஸ்.பி.முத்துராமன் (திரைப்பட இயக்குநர்), சுவாமிநாதன், செல்வமணி, சுப.வீரபாண்டியன் (பேராசிரியர் சுபவீ) ஆகியோரை எவ்வித மூடப்பழக்கங்களையும் பின்பற்றாமல் கொள்கை வழிப்பட்ட உறவுகளின் துணையுடன் வளர்த்தார் விசாலாட்சி.

1931-ஆம் ஆண்டில் தந்தை பெரியார் அவர்கள் முன்னறிவிப்பின்றி ஒரு கூட்டத்தில் விசாலாட்சியை மேடையில் பாடும்படி அழைத்தார். மேடையில் ஏறுவதற்கு அஞ்சிய விசாலாட்சிக்கு தைரியம் சொல்லி பேசச் செய்தார். அன்று முதல், பல்வேறு மாநாடுகளில் கொடி ஏற்றி வைத்தும், மாநாட்டைத் திறந்து வைத்தும் உரையாற்றினார் விசாலாட்சி.

ஒரு சிறுமியாக மேடையில் ஏறி “அண்ணன் மார்களே! அக்காமார்களே!” என்று பேசத் தொடங்கிய விசாலாட்சியிடம் வெளிப்பட்ட துணிவும் ஆர்வமும் எவ்வளவு ஆழமான கருத்தையும் எளிதாகப் புரிந்துகொண்டு அதனை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் ஆற்றலும் அவரை சுயமரியாதை இயக்க வீராங்கனையாக உருவாக்கின.

### சமதர்ம விலாஸ்

சாதி வழக்கங்களையும், சாஸ்திரங்களையும் எதிர்த்து நின்ற விசாலாட்சி - இராம சுப்பையாவை குடும்பத்துடன் தீர்த்துக்கட்ட முயற்சி நடந்த அதே ஊரில் அந்தத் தனவணிகர் சங்கத்தின் சார்பாக, விசாலாட்சிக்குச் ‘சீர்திருத்தச் செல்வி’ என்று பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது. அவர்கள் இல்லத்துக்கு ‘சமதர்ம விலாஸ்’என்று பெயர் சூட்டியவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்.

1931-ஆம் ஆண்டு நடைபெற்ற நாகை தாலுகா முதலாவது சுயமரியாதை மாநாட்டின் தலைவர் டபிள்யூ.பி.ஏ. சௌந்திரபாண்டியன் அவர்கள். வரவேற்புத் தலைவர் எம்.கே.குப்புசாமி அவர்கள். அந்த மாநாட்டின் திறப்புரையை ஆற்றியவர் காரைக்குடி ‘சுப.விசாலாட்சியம்மாள்’ என்று அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அது மட்டுமா? ‘விசாலாட்சி அம்மையார் நிகழ்த்திய சொற்பெருக்கு’ என்று தலைப்பிட்டு ‘குடிஅரசு’ இதழில் மூன்று பக்கங்களுக்கு அவரது பேச்சு அச்சிடப்பட்டது. இப்படிப்பட்ட வாய்ப்பை பெண்களுக்கு, குறிப்பாகச் சென்ற நூற்றாண்டில் திராவிட இயக்கம் தவிர, வேறு எந்த இயக்கமும் வழங்கவில்லை. அப்படிக் கிடைத்த அந்த வாய்ப்பை திராவிட இயக்கப் பெண்கள் எப்படிப் பயன்படுத்தினார்கள் என்பதற்கு, விசாலாட்சி அம்மையாரின் இந்த உரையே சான்று.

### பெண்ணுரிமைக்கு அதிரடி பேச்சு

குறிப்பாக தேசியம் பற்றி விசாலாட்சி அம்மையாரின், கருத்து, இன்றைக்கும் பொருந்துவதாக இருப்பது வியப்பை ஏற்படுத்துகிறது. “சுயமரியாதை இயக்கம் தேசியத்திற்கு எதிராக இருப்பதாகவும், மக்களின் ஜீவிதத்திற்காகக் கண்டுபிடித்திருக்கும் கதர் என்னும் கைத்தொழிலுக்கு விரோதமாக இருப்பதாகவும், இந்தியத் தாய் பாஷையாகிய ஹிந்திக்கு விரோதமாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இதை நாம் மறைக்க ஆசைப்படவில்லை. பழமையையே காப்பாற்றும் எந்தத் தேசியத்திற்கும், மிருகப் பிராயத்திற்கு அழைத்துக்கொண்டு போகச்செய்யும் வருணாசிரமத்தைப் போதிக்கும் ஹிந்தி தாய் பாஷையாக இருந்தாலும், தகப்பன் பாஷையாக இருந்தாலும், அப்பாஷைக்கும் நாங்கள் விரோதிகள்தான்!! எதிரிகள்தான்!!” என்றார்.

ஆண்களிடம் பெண்கள் அடையும் கொடுமை பற்றி எடுத்துச்சொல்வதில் அம்மையாரின் பேச்சுமுறையே அதிரடிதான்.

“ஆண்களாகிய உங்களை ஒரு பெண்ணானவள் தன் சௌகரியத்திற்கே கலியாணம் செய்து கொள்வதாய் கருதி அதன் அறிகுறியாய் உங்கள் கழுத்தில் ஒரு கயிற்றைக் (தாலி) கட்டி தன் வீட்டிற்கு அழைத்துப்போய்,

அங்குத் தன்னுடைய தாய் தகப்பன்மாருக்கும் சகோதரர்களுக்கும் நல்ல பிள்ளையாய் நடந்து கொள்ளச் செய்து, ..... மற்றும் உங்களைப்போல் இரண்டு மூன்று ஆண்களையும் தாலி கட்டி இழுத்துக்கொண்டு வந்து, அதே வீட்டில் வைத்து, “நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும்: உங்களுக்குள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டால் அடிப்பேன் உதைப்பேன் என்று சொல்லி.....மற்றும் உங்களுக்குக் கல்வி கொடுக்காமலும், கொடுத்தால் உங்கள் கள்ள ஸ்திரீகளுக்குக் கடிதம் எழுதுவீர்கள் என்றும், சொத்து கொடுக்காமலும், கொடுத்தால் நீங்கள் பெண்களுக்கு அடங்கி நடக்கமாட்டீர்கள் என்றும்,...... தினமும் அடித்துக் கொடுமைப் படுத்தினால்... உங்கள் நிலையைப்பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்?"

இந்தக் கேள்விகள் ஆண்கள் மனதை சிந்திக்கச் செய்து காரைக்குடிப் பகுதிகளில் பல குடும்பங்களை, திராவிட இயக்கத்தின் பக்கம் ஈர்த்தன.

### கல்லக்குடிப் போராட்டக் குடும்பம்

பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய பிறகு, விசாலாட்சி அம்மையார் தி.மு.க. நடத்திய நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறார். 1953-ஆம் ஆண்டு கல்லக்குடிப் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட இராம சுப்பையா அவர்கள் எந்தச் சிறையில் இருந்தார் என்றே தெரியாமல், அலைந்த போதும், திருச்சி சிறையில் மூன்று மாதம் சிறைத்தண்டனை பெற்று கலைஞருடன் சிறையில் இருக்கிறார் என்று தெரிந்து அங்கு சென்று அவரைப் பார்த்தபோதும் குடும்பத்தைப் பற்றியோ, பிள்ளைகளின் தேவைகளைப் பற்றியோ முறையிடவில்லை விசாலாட்சி. அவர் கணவர் இராம சுப்பையாவோ மனைவியை, பிள்ளைகளைத் தவிக்கவிட்டு சிறைக்குப் போக அஞ்சவில்லை, கலங்கவில்லை.

ஆனால், தான் விடுதலையான போது சிறையில் கலைஞர் அவர்களையும் மற்ற தோழர்களையும் விட்டுவிட்டுச் செல்வதற்காக அழுதிருக்கிறார். இத்தகைய கொள்கையாளரின் மனைவியாக தன் குடும்பத்தை நிலைநிறுத்த, விசாலாட்சி அம்மையார் எதிர்கொண்ட துயரங்களும் திராவிட இயக்க வரலாற்றின் பகுதிதான்.

விசாலாட்சி அம்மையாரின் கொள்கைத் துணிவு வியப்பூட்டுவதாகும். கைத்தறி நெசவாளர்கள் வறுமையில் தள்ளப்பட்ட காலத்தில் அவர்களுக்கு உதவுவதற்காக மேடையில் தி.மு.க. தலைவர்கள் கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும் ஒரு நிகழ்வை அறிமுகப்படுத்தினார் பேரறிஞர் அண்ணா. அதன்படி காரைக்குடியில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் மேடையில் கைத்தறித் துணியை விற்பனை செய்தார். அன்று மூத்த மகன் முத்துராமனுக்குக் கடும் காய்ச்சல். ஆனாலும், நானும் நிகழ்ச்சிக்கு வருவேன் என்று காய்ச்சலில் கிடக்கும் பிள்ளையைத் தோள் மீது போட்டுக்கொண்டு மேடையில் ஏறி கைத்தறி ஆடையை வாங்கினார்.

> **ஆண்களிடம் பெண்கள் அடையும் கொடுமை பற்றி எடுத்துச்சொல்வதில் அம்மையாரின் பேச்சுமுறையே அதிரடிதான்.**

### நெருக்கடி நிலை

ஒருமுறை எதிர்ப்புகளுக்கிடையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டம் நடந்தது. பெரும் கலவரம். விசாலாட்சி அம்மையாரும் தாக்கப்பட்டார். ஆனாலும், அவரது கொள்கை உறுதி குலையவில்லை. 1976-ஆம் ஆண்டு தொடங்கிய அவசர நிலை அடக்குமுறை காலத்திலும் துன்பங்கள், அவர் வாழ்வின் திசையை மாற்றவில்லை.

தந்தை பெரியார் தலைமையில் தொடங்கி, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமைவரையிலும் தடம் மாறாத விசாலாட்சி அம்மையாரின் வாழ்வு 1987-ஆம் ஆண்டு நிறைவுற்றது. எழுதப்படாத பல பெண் போராளிகளின் வரலாற்றைத் தனக்குள் அடக்கிய விசாலாட்சி அம்மையாரின் கொள்கைப் பயணம் அவரது மகனான பேராசிரியர் சுபவீ வழியே தொடர்கிறது. (வருவார்கள்...)

## திருச்சி வளநாடு கோயில் நல்லிணக்கத்தின் காட்சி!



‘இந்து-இந்தி-இந்தியா’ என சனாதனக் கோட்பாட்டை நிலைநிறுத்த முயன்று வருகின்ற, இந்தியாவைப் பீடித்துள்ள வகுப்புவாத சக்திகள், அனைத்து மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதன் மூலம், அவர்களது நோக்கத்தைச் செயல்படுத்த முடியும் என நம்புகின்றனர். வடமாநிலங்களில் அதைச் செயல்படுத்தியும் பார்த்துவிட்டனர். ஆனால், திராவிட மக்களின் தமிழ்நாட்டில் வகுப்புவாதிகளின் பிரிவினை எக்காலத்திலும் எடுபடாது. அதற்கு ஓர் உதாரணமாக, திருச்சி அருகே வளநாட்டில் நடைபெற்ற கோயில் திருவிழாவுக்கு, அந்த ஊரைச் சேர்ந்த இஸ்லாமிய மக்கள் பூ, பழங்கள் என சீர்வரிசைப் பொருட்களைக் கொண்டு வந்து அளித்ததை, சமூக நல்லிணக்கத்தின் உச்சமாகப் பார்க்கலாம்.

‘வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு இந்தியா’ என்பதை நமது முன்னோடிகள் வரையறுத்தனர். ஆனால், ஒற்றை அடையாளத்தை முன்னிறுத்தும் வகுப்புவாதிகள் அந்த ஒற்றுமையைச் சீர்குலைக்கத் துடிக்கின்றனர். அந்த ஒற்றுமையைத் தக்க வைக்கும் மாநிலம் என்பதை தமிழ்நாடு, எப்போதும் உணர வைத்துக்கொண்டே இருக்கிறது. அந்த நல்லிணக்கத்தின் காட்சி நாடு முழுவதும் பரவ வேண்டும்.

## :ப்ளாஷ்பேக்



### பழனியில் பெயர்சூட்டல்!

1996 நவம்பர் 23 அன்று, பழனியில் பெரியார் சிலை திறப்பு நிகழ்ச்சி ஆசிரியர் அய்யா தலைமையில் நடைபெற்றது. திராவிடர் கழகத் தோழர்களின் முயற்சியால் அந்தச் சிலை நிறுவப்பட்டது. திராவிடர் கழகத்தைச் சேர்ந்த என் தந்தை இரா.சேது, 4 மாத குழந்தையான என்னை ஆசிரியரிடம் தூக்கிச் சென்று பெயர் வைக்குமாறு கேட்டுக் கொண்டார். கருவில் இருக்கும்போதே பெண் குழந்தை என்றால் ‘மதிவதனி’ என்றும் ஆண் குழந்தை என்றால் ‘பிரபாகரன்’ என்றும் பெயர் வைக்க முடிவு செய்யப்பட்ட காரணத்தால் ஆசிரியரிடத்தில் ஒரு துண்டு சீட்டில் ‘மதிவதனி’ என்ற பெயர் எழுதிக் கொடுக்கப்பட்டது. ஆசிரியர் என்னை தன் கையால் தூக்கி எனக்குப் பெயர் வைத்தார். பழனியில் முதல் பெரியார் சிலை அமைக்கப்பட்ட அதே தினத்தில் எனக்குப் பெயர் வைக்கப்பட்டது இன்றைக்கு நினைத்தாலும் புத்துணர்வூட்டும் ஒன்றாக இருக்கிறது.



மதிவதனி

**-சே.மெ.மதிவதனி, துணை பொதுச் செயலாளர், திராவிடர் கழகம்**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்க ளுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### வரலாற்றுத் தீர்மானம்!

**1929 -ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில்தான் தந்தை பெரியார் பெண்ணுரிமைக்கான தீர்மானத்தை நிறைவேற்றினார். அந்தத் தீர்மானத்தை அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் 1989-ஆம் ஆண்டில், பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை எனச் செயல்பாட்டுக்குக் கொண்டுவந்தார் கலைஞர். இதுபோன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தீர்மானத்தைச் சட்டமாக்குவதற்கான வாய்ப்பு கிடைத்ததை எண்ணி, மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 218




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.